வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 15.05.2024 புதன்கிழமை இதழ் : 136 பக்கங்கள் : 12




# பிரபாகரனை உயிருடன் தருமாறு அமெரிக்கா, சீனா, இந்தியா கோரின

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, மே 15

போரின்போது இலங்கை கடற்பரப்புக்கு அப்பால் - சர்வதேச கடல் எல்லைக்கு அமெரிக்க கடற்படை கப்பல் வந்தது. பிரபாகரனை உயிருடன் தருமாறு அமெரிக்கா அப்போதைய அரசாங்கத்திடம் வலியுறுத்தியது. இதேபோன்று இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளும் பிரபாகரனை உயிருடன் தருமாறு கோரின.

- இவ்வாறு நேற்றைய தினம் பாராளுமன்றில் தெரிவித்தார் விமல் வீரவன்ஸ எம். பி.

அத்துடன், விடுதலைப் புலிகளுடனான போரை முடிவுக்குக் கொண்டு வராமல் இருந்திருந்தால் தெற்காசியாவில் தமிழீழம் தோற்றம் பெற்றிருக்கும். அது இஸ்ரேல்போல் மாற்றமடைந்திருக்கும். காஸாவின் இன்றைய நிலை எமக்கு (சிங்களவர்களுக்கு) ஏற்பட்டிருக்கும் என்றும் அவர் கூறினார்.

பலஸ்தீன விவகாரம் தொடர்பான ஒத்திவைப்பு பிரேரணை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் ஆற்றிய உரையில் தெரிவித்தவை வருமாறு,

இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற தாக்குதலால் பலஸ்தீனர்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். பலஸ்தீனர்களின்

11

## புதிய கூட்டணி உருவாகும்!

### அமைச்சர் சுசில்

கொழும்பு, மே 15

எதிர்வரும் தேர்தலுக்கு முகங்கொடுக்க புதிய கூட்டணி உருவாக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை நவின் பெர்னாண்டோவுடன் சென்று சந்தித்த பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11

## ஐஸ் போதை உற்பத்தியகம் இணுவிலில் கண்டறியப்பட்டது

### பின்னணியில் ஆவா அடாவடி குழு



யாழ்ப்பாணம், மே 15

இணுவிலில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை பொலிஸார் கண்டறிந்துள்ளனர். இவ்வாறு கண்டறியப்பட்ட இடத்தில் யாழ். போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி செ. பிரணவன், யாழ். பல்கலைக்கழக துறைசார் நிபுணரும் நேற்று சென்று பார்வையிட்டு

11

## விடுதலைப் புலிகள் மீதான தடையை 5 ஆண்டுகள் நீடித்தது இந்தியா!

### அமைப்பை மீண்டும் கட்டமைக்க முயற்சி என்றும் சுட்டிக்காட்டு!

புதுடில்லி, மே 15

விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடித்துள்ளது இந்திய அரசாங்கம். அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகள் இன்னும் இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்புக்கு பாதகமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது என்றும் இந்திய மத்திய உள்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

புலிகள் மீதான தடையை நீடித்து நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில்,

"2009 மே மாதம் இலங்கையில் இராணுவத் தோல்விக்கு பிறகும் விடுதலைப் புலிகள் தமிழீழம் (தமிழர்களுக்கான சுதந்திர

11

## சுமந்திரன் கூறுவது அப்பட்டமான பொய்

### சுரேஷ் பிறேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், மே 15

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனை போட்டியிடுமாறு நான் கோரினேன் என்று அவர் கூறியிருப்பது அப்பட்டமான பொய்", - இவ்வாறு ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

11

## பள்ளிமுனை கடற்பரப்பில் வள்ளம் கவிழ்ந்த விபத்தில் ஒருவர் மரணம்!

மன்னார், மே. 15

மன்னார் - பள்ளிமுனை கடற்பரப்பில் வள்ளம் கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன் தினம் கடற்றொழிலுக்காக சென்றபோது திடீரென கடும் காற்று வீசியமையினால் வள்ளம் கவிழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அவருடன் சென்ற ஏனையோர் தப்பியுள்ளபோதிலும் குறித்த மீனவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து ஏனையோர் இணைந்து உயிரிழந்த வரின் சடலத்தை மீட்டு மன்னார்

11

## நினைவேந்தும் உரிமையை நிராகரிக்கவே முடியாது!

### சம்பந்தன் எம். பி. தெரிவிப்பு



கொழும்பு, மே 15

தமிழ் மக்கள் தங்கள் உயிர் நீத்த உறவுகளை நினைவேந்துவதற்கான முழுமையான உரிமை உடையவர்கள். அது அவர்களின் அடிப்படை உரிமையாகும். அதனை நிராகரிக்கவே முடியாது - என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்

11

## 1,220 கொத்தணி பாடசாலைகள் நாடளாவிய ரீதியில் உருவாகும்

### கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு

கொழும்பு, மே 15

கல்வி நிர்வாக சீர்திருத்தத்தின் ஆரம்ப கட்டமாக நாடளாவிய ரீதியில் 1,220 கொத்தணி பாடசாலைகள் உருவாக்கப்படும். இவற்றைக் கண்காணிக்க 350 பாடசாலை குழுக்கள் உருவாக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்து அதற்குரிய சுற்றுநிருபம் எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடத்திய செய்தி யாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத்

11

## பலஸ்தீனம் மீதான அக்கறை எமது மக்கள்மீது இல்லையா?

### பாராளுமன்றில் சுமந்திரன் கேள்வி

கொழும்பு, மே 15

பலஸ்தீனத்தில் இடம்பெறும் இனப்படுகொலை தான் இலங்கையில் தமிழர்களுக்கும் நேர்ந்தது. பலஸ்தீனத்துக்கு குரல் கொடுக்கும் இலங்கை, தமிழர்களுக்கு என்ன செய்தது? இதுதான் இலங்கையின் நயவஞ்சக தன்மை - இரட்டை வேடம். பலஸ்தீனம்மீது அக்கறை கொண்டுள்ளீர்கள். அந்த அக்கறை எங்கள் மக்கள் மீது இல்லையா? என்று கேட்கிறேன்

11

## நீதிமன்ற சுயாதீனம் பறிக்கப்பட்டுள்ளதா?

### கஜேந்திரன் சபையில் கேள்வி

கொழும்பு, மே 15

பொலிஸார், நீதிமன்றங்களுக்கு சென்று எதை சொன்னாலும் அதை அப்படியே ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டிய நிலைக்கு நீதிமன்றங்களின் சுயாதீனம் பறிக்கப்பட்டுள்ளதா? - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன்.

2009 ஆம் ஆண்டு தமிழர் மீது கட்டவிழ்த்து

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

எல்லோரும் ஜனாதிபதி தேர்தலில் கவனம் செலுத்திக்கொண்டிருக்க சத்தம் சந்தடி இல்லாமல் திடீரென்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படலாம் என்று தெற்கில் பரவலாக பேசப்படுகின்றது.

ஏற்கனவே, முதலில் பாராளுமன்றத் தேர்தலை நடத்துமாறும் அப்படி நடத்தினால்தான் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்தவர்கள் வெற்றிபெற முடியும் என்றும் மாறாக முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் அதில் வெற்றிபெறுபவரின் கட்சியே அதிக இடங்களில் வெற்றிபெற்றுவிடும் என்றும் பஸில் ராஜபக்ஷ நீண்டகாலமாகவே ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும் அதற்கு ஜனாதிபதி இணங்கவில்லை என்ற செய்திகளே வந்துகொண்டிருந்தன.

ஆனால், தனக்கான வெற்றி வாய்ப்புகள் குறித்து வாராவாரம் கருத்துக்கணிப்பு நடத்துமாறு புலனாய்வாளர்களைக் கேட்டிருந்த ஜனாதிபதி அவர்களிடமிருந்து கிடைக்கும் "றிப்போர்ட்டை" வைத்துக்கொண்டு அடுத்து என்ன செய்யலாம் என்று திட்டமிட்டு வருகின்றாராம்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து தனது பக்கம் வரக்கூடியவர்களை ஜூன் மாதம் நடுப்பகுதிவரை காத்திருக்க சொல்லியுள்ள ஜனாதிபதி அவ்வாறு கணிசமானவர்கள் தன்பக்கம் வருகின்றபோது - தன்மீதான மக்களின் நம்பிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும் அதனால் தனது வெற்றி வாய்ப்பு பிரகாசமாகும் எனவும் நம்புவதாக முன்னர் கூறப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பெருந்தொகையானவர்கள் தன்பக்கம் வருகின்றபோது, அதன் தலைவர் சஜித் பிரேமதாஸ சற்று பலவீனமடைவதுடன் அவர் தானாகவே சிலவேளைகளில் போட்டியிலிருந்து விலகலாம் என்றும் முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இப்போது பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தினால் எந்த ஒரு கட்சிக்குமே அறுதிப்பெரும்பான்மை கிடைக்காது என்பதாலும் அவ்வாறு பாராளுமன்றில் ஒரு நிலையான ஆட்சியை அமைக்க எந்தக் கட்சியாலும் முடியாத சந்தர்ப்பத்தில் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இரண்டு கட்சிகளை இணைத்து ஆட்சியை அமைக்க முடியும் என்றும் அவ்வாறு இணைக்கின்ற (இணைகின்ற) கட்சிகளின் ஆதரவுடன்தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் இலகுவாக வெற்றியைப் பெறமுடியும் எனவும் ஜனாதிபதித் தரப்பில் இப்போது கணக்குப் போடப்படுகின்றதாம்.

தன்னோடு வரத் தயாராக இருக்கின்ற ஐக்கிய மக்கள் சக்தியினரையும் பாராளுமன்றத் தேர்தலில் அந்தக் கட்சியில் போட்டியிட்டு அவர்கள் வெற்றி பெற்றாலும் ஆட்சியமைக்க போதுமான பலம் இல்லாமல் போனால், அவர்கள் ஆளும் தரப்புக்கு (ஜனாதிபதி நியமிக்கும் ஆட்சிக்கு) மாறுவதற்கு யோசிக்க மாட்டார்கள் என்றும் அது எதிர்பார்க்கப்படுவதையும்விட அதிகமானவர்களை பிரித்தெடுக்க உதவும் எனவும் கணக்குப் போடப் படுகின்றதாம்.

அதேவேளை, இன்று பிரதான போட்டியாளர்களாக இருக்கும் தேசிய மக்கள் சக்தியை பொறுத்தவரை ஒவ்வொரு மாவட்டத்திலும் போட்டியிடுவதற்கு நட்சத்திர வேட்பாளர்கள் என்று யாரும் இல்லை. ஆனால், ஜனாதிபதி தேர்தல் என்றால் அதில் அநுர குமார திஸநாயக்கா ஒருவரே போட்டியிடுவதால் அவர் நாடு முழுவதிலும் நட்சத்திர வேட்பாளராக இருப்பார். ஆனால், பாராளுமன்றத் தேர்தலில் அவர் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்ற போது அவரோடு சேர்ந்து போட்டியிடுகின்றவர்கள் எவருமே அந்த அளவுக்கு அறிமுகமானவர்களாக இருக்கப் போவதில்லை. உதாரணமாக கொழும்பில் சம்பிக்க, தினேஷ் குணவர்த்தன, சஜித், பந்துல குணவர்த்தன, ரவி கருணாநாயக்க, சுசில் பிரேமஜயந்த, விமல் வீரவன்ஸ, கம்மன்பில என்று ஒரு பட்டாளமே களத்தில் நிற்கும். இவர்களை விழுத்தி வெற்றிபெறக்கூடிய பலர் ஜே. வி. பியிடம் இல்லை.

இதனால், ஜனாதிபதி தேர்தலில் பெறக்கூடிய அளவுக்கு அவர்களால் பாராளுமன்ற தேர்தலில் வாக்குகளை திரட்சியாகப் பெறமுடியாத நிலையே ஏற்படும். இது, அதன்பின்னர் நடக்கின்ற ஜனாதிபதி தேர்தலில் ரணில் தரப்புக்கு இலகுவாக இருக்கும்.

அப்படி இரண்டு தேர்தல்களையும் இந்த வருடத்திலேயே நடத்தி முடிக்க முடியுமா என்பது தெரியவில்லை. ஆனால், பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு தற்போது இருப்பதால், அவர் அதனைக் கலைத்தால் உடனடியாக பாராளுமன்றத்துக்கு தேர்தலை நடத்தவேண்டிய இக்கட்டான நிலைமை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வரவே செய்யும். எல்லாம் இன்னும் சில வாரங்களில் தெரிந்துவிடும்.

"யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" என்பதுபோல பொதுஜன பெரமுனவும் தனது பிரசார பணிமனையை நவீன வசதிகளுடன் கூடியதாக அண்மையில் திறந்து வைத்திருந்ததையும் நாம் கவனத்தில் கொள்ளலாம்.

பாராளுமன்றத் தேர்தல் எப்போது நடந்தாலும் அது ஒரு ஜனநாயக தேர்தலாக இருக்காது என்பதும், அது "பணநாயக" தேர்தலாகத்தான் இருக்கும் என்பதும் நாம் எதிர்பார்க்கக்கூடியது தான். மக்கள் இப்போது பசியோடு இருக்கின்றனர். மக்களின் "பசியை" அறிந்து வைத்திருக்கும் அரசியல்வாதிகள் அதனை நன்கு பயன்படுத்தவே முயற்சிசெய்வார்கள் என்பதால், பணநாயகர்களே அதிகம் வெற்றிபெறுவதற்கும் அதிக சந்தர்ப்பம் இருப்பதாக தெற்கில் ஓர் அரசியல் அவதானி தெரிவித்தார்.

- ஊர்க்குருவி.

## பொருளாதார வீழ்ச்சியில் சிலர் அரசியல் இலாபம் தேட முயற்சி

### பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 15

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியில் சிலர் அரசியல் இலாபம் தேடுவதற்கு முயற்சி செய்வதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் இன்று எரிபொருள் எரிவாயு தட்டுப்பாடு இல்லை. அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை. மக்கள் நீண்டநேரம் இருளில் இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. மக்கள் ஆணையினூடாகவே நாட்டில் அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் எதிர்க் கட்சிகள் ஆட்சிக் கவிழ்ப்பிற்கு வழிவகுத்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி அமைக்கப்படும் பட்சத்தில் அவர்களின் பொருளாதார வேலைத் திட்டங்கள் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டும்.

இந்த நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காலி முகத்திடல் போராட்டத்திறகு வழிவகுத்தது. இன்று அதில் பலர் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றனர் - என்றார். (அ)

## விவசாய ஏற்றுமதி பொருளாதாரத்தை நாட்டில் உருவாக்க புதிய சட்டவரைவு

### அங்கீகரித்தது அமைச்சரவை



கொழும்பு, மே 15

நாட்டின் விவசாய பொருளாதாரத்தை ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றுவதற்கான சட்டவரைபுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாரம்பரிய பெருந்தோட்டக் கைத்தொழிலுக்குப் பதிலாக புதிய விவசாய வர்த்தகத் துறையொன்றை உருவாக்கி நாட்டை பொருளாதார ரீதியாக முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு தாம் செயல்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை, புதிய சட்டத்தின் மூலம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கிடை யிலுள்ள தடைகள் நீக்கப்பட்டு பெருந்தோட்டத்துறையில் புதிய தொழில்நுட்ப முகாமைத்துவத்தை அறிமுகப்படுத்தவுள்ளதா கவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதுருகிரிய தேசிய தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் புதிய கல்வி மற்றும் நிர்வாக கட்டடத்தை நேற்றுக் காலை ஜனாதிபதி திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பெருந்தோட்டத் துறைக்குத் தேவையான புதிய திறன்களைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்கவும் இளைஞர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்தவும் தேசிய தோட்ட முகாமைத்துவ நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தை அபிவிருத்தி செய்வதன் மூலமே இந்த நாட்டின் கிராமப்புற மக்களின் வறுமையை ஒழிக்க முடியும்.

இலங்கையை அண்டியுள்ள நாடுகளின் சனத்தொகை பல பில்லியன்களால் அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது என்றும் அந்த நாடுகளில் உள்ள நடுத்தர மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் விவசாயத்தை உருவாக்குவதன் மூலம், இலங்கையின் ஏற்றுமதி விவசாயத் தொழிலை உயர்த்த முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (எ)

## சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவு பரிசாக தேயிலை

கொழும்பு, மே 15

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் வருகை முடிந்து திரும்பும் போது விமான நிலையத்தில் இலங்கை தேயிலையை நினைவுப் பரிசாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர முன்மொழிந்துள்ளார்.

அதன்படி, சிலோன் தேயிலையின் பெயரை உலகில் பிரபலப்படுத்தும் நோக்கில், இலங்கைக்கு வரும் ஒவ்வொரு சுற்றுலாப் பயணிகளுக்கும் இலங்கை தேயிலை பொருட்கள் அடங்கிய நினைவுப் பரிசு வழங்கப் படவுள்ளது.

தேயிலை கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண் டிய நடவடிக்கைகள் தொடர்பாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் மஹிந்த அமரவீர இந்த யோசனையை முன்வைத்தார்.



இக்கலந்துரையாடலில் இலங்கை தேயிலை சபை, சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை, தேயிலை தோட்டக்காரர்கள் சங்க பிரதிநிதிகள் மற்றும் தேயிலை தொழில் துறை பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அதேவேளை வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு தேயிலையை நினைவுப் பரிசுகளாக வழங் கும் யோசனைக்கு தேயிலை கைத்தொழில் துறையினர் இணக்கம் தெரிவித்ததுடன், அதற்கு பங்களிக்கத் தயாராக இருப்பதாகவும் அமைச்சரிடம் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
15.05.2024 புதன்கிழமை
குரோதி வருடம், வைகாசி 02
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# டொனால்ட் லூவின் கவனத்துக்கு...!

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் டொனால்ட் லூவின் இலங்கை வருகை உணர்வுபூர்வமான காலப்பகுதியில் நடைபெற்றிருக்கின்றது. முள்ளிவாய்க்கால் பேரவலம் நடைபெற்று பதினைந்து ஆண்டுகளாகின்றன. மே-19இற்கான உணர்வுடன் தமிழ் மக்கள் கலந்திருக்கின்றனர்.

அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையில் மனித உரிமைகள்சார் கரிசனை அடிப்படையானது. அமெரிக்காவின் தலையீடுகளை அதன் புவிசார் அரசியல் நலன்களிலிருந்து பிரித்து நோக்கமுடியாது. எனினும், மனித உரிமைகள்சார் விழுமியங்களை உலகளவில் பாதுகாப்பதில் அமெரிக்காவுக்கு முதன்மையான பங்குண்டு.

இறுதியுத்தம் மோசமான அழிவுகளுடன் முற்றுப்பெற்றதைத் தொடர்ந்து யுத்தத்தின்போதான மனித உரிமைகள்மீறல் விவகாரம் உலகளவிலான பேசுபொருளானது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் 2012இல் ஒபாமா நிர்வாகம் இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கைமீதான பிரேரணைக்கு ஆதரவளித்தது. அன்றைய சூழலில் அமெரிக்க ஆதரவுப் பிரேரணை என்றே அது பரவலாக அழைக்கப்பட்டது.

அமெரிக்காவின் தலையீடு இல்லையென்றால் அவ்வாறானதொரு பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்காது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இலங்கைமீதான மனித உரிமைகள்சார் அழுத்தங்களுக்கான பிள்ளையார் சுழி 2012இல்தான் இடப்பட்டது. அப்போதிருந்த சீன சார்பு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அமெரிக்க அழுத்தங்களை பொருட்படுத்தவில்லை. மேலும், பொறுப்புக்கூறல் விடயத்தில் மேற்குலகத்துடன் ஒத்துழைக்கவும் மறுத்தது.

அன்று ஆரம்பிக்கப்பட்ட பொறுப்புக்கூறல் தொடர்பான அழுத்தங்கள் இன்றுவரையில் தொடர்கின்றது. இங்கு கவனிக்க வேண்டிய விடயம் - இந்த அழுத்தங்களால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களுக்கான நீதி விவகாரத்தில் ஒரு சிறிய முன்னேற்றமும் ஏற்படவில்லை. பேச்சுகளிலும் அறிக்கைகளிலுமே காலம் செலவழிந்திருக்கின்றது. இந்த அடிப்படையில் இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தில் அமெரிக்க அழுத்தங்கள் தோல்வியுற்றிருக்கின்றன.

வல்லரசுகளின் தலையீடுகள் அவர்களின் நலன்சார் அரசியல் ஆட்டங்களுடன் தொடர்புடையவை என்னும் விமர்சனம் உண்டு. இருந்தபோதிலும்கூட, ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் இப்போதும் சர்வதேச மனச்சாட்சி தொடர்பான நம்பிக்கை முற்றிலுமாக இல்லாமல் போய்விடவில்லை. மேற்குலக அழுத்தங்கள் தொடர்பில் ஈழத் தமிழ் மக்களும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் நம்பிக்கையுடன்தான் இருக்கின்றன. அமெரிக்காவை, இந்தியாவை - மேற்குலகை நம்புவதைத்தவிர பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னால் வேறுதெரிவுகள் எவையும் இல்லையென்பதுதான் கசப்பான உண்மை - எனினும், தமிழ் மக்கள் தங்களால் முடிந்தளவு ஜனநாயக முறையில் போராடி வருகின்றனர். இந்தவிடயங்களை டொனால்ட் லூ அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வல்லரசுகளின் மூலோபாய போட்டிகளுக்கு மத்தியில் ஒரு சிறிய தேசிய இனத்தின் நீதிக்கான ஒப்பாரி கரைந்தழிந்துவிடக்கூடாது. அவ்வாறு நிகழ்ந்தால் அது பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியின் மறுப்பு மட்டுமல்ல. கூடவே, அமெரிக்காவின் மனித உரிமைகளுக்கான அழுத்தங்களின் தோல்வியுமாகும்.

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும்கூட - ஆகக் குறைந்தது அரசமைப்பில் உள்ள ஏற்பாடுகளைக்கூட முழுமையாக அமுல்படுத்துவதற்கு தயாரற்ற அரசியல் சூழலொன்றே இலங்கைத் தீவில் நிலவுகின்றது. மாகாண சபைகள் தேர்தலை தொடர்ந்தும் அரசாங்கம் பிற்போட்டுக்கொண்டு வருகின்றது. எனவே, இலங்கையின் ஆட்சியாளர்களை வெறுமனே பொருளாதார மீட்சியின் ஊடாக மட்டும் நோக்குவதிலுள்ள பொருத்தப்பாடின்மையையும் அமெரிக்கா கருத்தில் கொள்ளவேண்டும்.

# எழுத்தாளர்களை ஊக்குவிப்பதோடு கலைகளையும் வளர்க்க வேண்டும்

## வடக்கு ஆளுநர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 15

உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதைப் போல கலைகளையும் வளர்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

தமிழியல் ஆய்வு நடுவகம் அமைப்பின் கோரிக்கைக்கு அமைய, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களை ஊக்குவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. ஆளுநர் தலைமையில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் தமிழியல் ஆய்வு நடுவகம் அமைப்பின் தலைவர் உள்ளிட்ட குழுவினரும், ஆளுநரின் உதவிச் செயலாளர், உள்ளூராட்சித் திணைக்களப் பணிப்பாளர், மாகாண கலாசார உதவிப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உள்ளூர் எழுத்தாளர்களின் தற்போதைய நிலைமை, பதிப்பகங்கள், அச்சகங்களின் செயல்பாடுகள், நூல் பதிப்பு மற்றும் விற்பனை, கலை, இலக்கியத் துறையின் சமகாலப்போக்கு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

உள்ளூராட்சி அமைப்புக்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்தித் திணைக்களங்கள் தம்மிடம் காணப்படும் நிதியில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, உள்ளூர் எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் ஆளுநர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதேவேளை, தமிழியல் ஆய்வு நடுவகம் அமைப்பை வடக்கு மாகாணம் முழுவதும் செயல்படும் வகையிலாக பதிவுகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநர் தெரிவித்தார். உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதைப் போல, கலைகளையும் வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆளுநர் குறிப்பிட்டார். திறந்தவெளி அரங்குகளில் உள்ளூர் கலைகளை மேடையேற்றி அவற்றை அழிந்திடாமல் பாதுகாத்து புத்துயிர் வழங்க மாகாண கலாசார திணைக்களத்துக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் ஆளுநர் கூறினார். (எ)

# சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய 80 வயது முதியவர்!

கொழும்பு, மே 15

தற்போது நடைபெற்று வரும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 80 வயது முதியவர் ஒருவர் கணித பாடத்தில் தோற்றியுள்ளமை அனைவரது கவனத்தினையும் ஈர்த்துள்ளது.

நிமல் சில்வா என்ற பாணந்துறை - கிரிபெரிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்.

இவர் ஒரு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியாவார்.

கல்விக்கு வயது ஒரு தடை இல்லை என்பார்கள். இதற்கமைய குறித்த முதியவர் பரீட்சையில் தோற்றியுள்ளமை கல்வி மீதான அவரது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் குறித்த முதியவருக்கு பலரும் சமூக வலைத்தளங்களில் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். (அ)

# ஜப்பானில் இலங்கையருக்கு புதிய தொழில் வாய்ப்புக்கள்!

கொழும்பு, மே 15

ஜப்பானில் புதிய தொழில்வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களை இலங்கையர்களுக்கு வழங்க அந்த நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, கட்டட சுத்திகரிப்பு துறையில் புதிய தொழில்வாய்ப்புக்களை இலங்கையர்களுக்கு பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான ஜப்பான் தூதரகம் தெரிவிக்கின்றது.

அத்துடன் நிர்மாணத்துறை, விமான நிலைய தரை சுத்திகரிப்பு, தங்குமிட தொழில்துறை உள்ளிட்ட 7 துறைகளுக்காக இலங்கையர்களை இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தொழில்வாய்ப்புகளுக்காக ஜூன் 5ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என தூதரகம் அறிவித்துள்ளது.

மேலும் ஜப்பானில் இதுவரை இலங்கையர்களுக்கு 37ஆயிரம் தொழில்வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளமை குறிபபிடத்தக்கது.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 15 புதன்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 02
நல்ல நேரம் : 09.30 - 11.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சப்தமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். நல்லது நடக்கும்.

**இடபம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். வெற்றி பெறும் நாள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். மன நிம்மதி ஏற்படும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் எந்த வேலையையும் முடிக்க முடியாமல் தடையும் தாமதமும் ஏற்படும். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**சிம்மம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். மறைமுக எதிர்ப்புகளை சந்திக்க நேரிடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கன்னி**
எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**துலாம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த 2 நாட்களாக இருந்த டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். நட்பு வட்டம் விரியும். தொழில், உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். பொறுமை தேவையான நாள்.

**மகரம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். பேச்சுவார்த்தை சாதகமாகும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார். தொட்டது துலங்கும் நாள்.

**மீனம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உயர் கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற பா. ஜ. கவினர் பொலிஸாரால் கைது

சென்னை, மே 15

தென்னிந்திய மக்களை ஆபிரிக்கர்களுடன் ஒப்பிட்டு காங்கிரஸ் மூத்த நிர்வாகி சாம் பிட்ரோடா கருத்து வெளியிட்டதைக் கண்டித்து, பா. ஜ. க. மாநில துணைத் தலைவர் கரு. நாகராஜன் தலைமையில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பில் கரு. நாகராஜன் கூறுகையில், "ஆர்ப்பாட்டம் நடத்த பொலிஸார்



எமக்கு அனுமதி வழங்கவில்லை. விரைவில் நீதிமன்றம் சென்று, இதே வள்ளுவர் கோட்டத்தில் நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்வோம்"- என்றார். (எ)

# அண்ணாமலைமீது வழக்கு பதிய அனுமதி வழங்கப்படவில்லை

## ஆளுநர் மாளிகை விளக்கம்

சென்னை, மே 15

தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலைக்கு எதிரான குற்றவியல் வழக்குப் பதிவு செய்ய அனுமதி வழங்கப்படவில்லை என்று ஆளுநர் மாளிகை விளக்கமளித்துள்ளது.

அண்ணாமலை கடந்தாண்டு செப்ரெம்பர் மாதம் மதுரையில் பேசும்போது, மீனாட்சி அம்மன் கோவிலில் 1956 ஆம் ஆண்டு நடந்த நிகழ்ச்சியில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், அறிஞர் அண்ணா குறித்து பேசியதாக சர்ச்சைக் கருத்தை வெளியிட்டார். ஆனால், அப்போது முத்துராமலிங்கத் தேவர் அவ்வாறு பேசவில்லை என்று பத்திரிகைகள் தகவல் வெளியிட்டன.

இந்நிலையில், கடந்த பெபரவரி மாதம் சேலத்தை சேர்ந்த வி. பியூஷ் என்பவர் அண்ணாமலை, இதுபோன்ற பொய்த் தகவல்களைப் பரப்பி மக்கள் மத்தியில் மோதலை ஏற்படுத்த முயல்வதால் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சேலம் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தார்.

இதுகுறித்து சேலம் பொலிஸ் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்ததுடன், சேலம் நீதித்துறை நடுவர் மன்றத்திலும் வழக்குத் தொடர்ந்தார். அத்துடன், ஆதாரங்களையும் சமர்ப்பித்திருந்தார்.

இதையடுத்து, கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி தமிழக பொதுத் துறை செயலாளர் கே. நந்தகுமார் அரசாணை ஒன்றைப் பிறப்பித்தார்.

அதில், அண்ணாமலை மீது குற்ற வழக்குத் தொடர அனுமதியளிக்கப்பட்டிருந்தது. மேலும், அந்த அரசாணையின் கீழ், வழக்கம்போல் அரசாணைகளில் இடம்பெறும் ஆளுநரின் ஆணைப்படி என்ற வாசகமும் இடம்பெற்றிருந்தது.

இது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை மீது குற்ற வழக்குத் தொடர ஆளுநர் ஆர். என். ரவி அனுமதியளித்ததாக ஊடகங்களில் செய்தி வெளியானது. இந்தத் தகவலை ஆளுநர் மாளிகை மறுத்துள்ளது.

இதுகுறித்து ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக் குறிப்பில், "தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை மீது குற்றவியல் வழக்குப் பதிவு செய்ய தமிழக ஆளுநரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் பரவி வரும் செய்தி குறித்து, ஆளுநர் மாளிகைக்கு கடந்த 2 நாட்களாக பொதுமக்களிடம் இருந்து பரபரப்பு கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

அண்ணாமலைக்கு எதிரான குற்றவியல் வழக்கு குறித்து ஆளுநர் மாளிகை எந்தவொரு தகவலும் அறிந்திருக்கவில்லை. மேலும், இது தொடர்பான அனுமதி உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை " எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இ. பி. எஸ். வசம் இரட்டை இலை

## ஒதுக்கியது ஏன்?

சென்னை, மே 15

இ. பி. எஸ். தரப்புக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்கியது ஏன்? என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தேர்தல் ஆணைக்குழு விளக்கமளித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஒசூரை சேர்ந்த பி. ஜெயசிம்மன் என்பவர் 2024 மக்களவை தேர்தலில் யாருக்கு? எதன் அடிப்படையில் இரட்டை இலை சின்னம் ஒதுக்கப்பட்டது என தேர்தல் ஆணைக்குழுவிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

கடந்த மார்ச் 18 ஆம் திகதி சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில், இரட்டை இலை சின்னம், கட்சியின் பெயர், கொடி ஆகியவற்றை முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் பயன்படுத்தக் கூடாது என்று உத்தரவிட்டிருந்தது. அந்த உத்தரவை கருத்தில் கொண்டே இரட்டை இலை சின்னத்தை பழனிசாமி தரப்புக்கு ஒதுக்கியதாக தேர்தல் ஆணைக்குழு விளக்கமளித்துள்ளது. (எ)

### தயாநிதி மாறன் வழக்கு

# நீதிமன்றில் முன்னிலையானார் முன்னாள் முதல்வர் பழனிசாமி

சென்னை, மே 15

தயாநிதி மாறன் தொடர்ந்த அவதூறு வழக்கு விசாரணைக்காக முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி நீதிமன்றில் முன்னிலையானார். இந்த நிலையில் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அ. தி. மு. க. பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி, கடந்த மாதம் 15 ஆம் திகதி சென்னை புரசைவாக்கத்தில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் "நம்மை எதிர்த்து தி. மு. க. சார்பில் போட்டியிடும் நபர் (தயாநிதி மாறன்) தனது சொந்த நலனுக்காகப் போட்டியிடுகிறார். எம்.பியாகவுள்ள அவர், தனது பாராளுமன்ற மேம்பாட்டு நிதியில் சுமார் 75 சதவீத நிதியைச் செலவு செய்யவில்லை" என்று குறிப்பிட்டார்.

எடப்பாடி பழனிசாமியின் இந்தப் பேச்சுக்கு எதிராகத் தயா



நிதி மாறன் குற்றவியல் அவதூறு வழக்குத் தொடர்ந்தார். உண்மைத் தன்மையை ஆராயாமல் எடப்பாடி பழனிசாமி பேசியுள்ளார் என்றும் இது உண்மைக்குப் புறம்பானது என்றும் மக்கள் மத்தியில் தனக்குள்ள நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் எடப்பாடி பழனிசாமி பேசியுள்ளார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்த வழக்கு தொடர்பாக எடப்பாடி பழனிசாமி நேற்று எழும்பூர் நீதிமன்றில் முன்னிலையானார். இதையடுத்து வழக்கின் விசாரணை ஜூன் 27 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகளைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்ற பஸ் விபத்து!

## யாழ். பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், மே. 15

**யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு கைதிகளை ஏற்றி சென்ற, சிறைச்சாலைக்கு சொந்தமான பஸ் நேற்று முன் தினம் திங்கட்கிழமை விபத்துக்குள்ளாகியது.**




ஊர்காவற்துறை நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் முடிவடைந்த பின்னர் கைதிகளை யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்கு ஏற்றிச்சென்றபோது, நாரந்தனை பகுதியில் முன்னால் சென்று கொண்டிருந்த ஹைஏஸ் ரக வாகனம் திடீரென நிறுத்தப்பட்டமையால், பின்னால் சென்ற சிறைச்சாலைக்கு சொந்தமான பஸ் மோதி விபத்துக்குஉள்ளானது.

விபத்தில் ஹைஏஸ் ரக வாகனத்தில் பயணித்த நபர் ஒருவர் காயமடைந்த நிலையில், ஊர்காவற்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தினை அடுத்து, சிறைச்சாலை பஸ்ஸிலிருந்த கைதிகள் வேறு வாகனத்திற்கு மாற்றப்பட்டு சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# தமிழர் விடுதலை கூட்டணிக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!

வவுனியா, மே. 15

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகத்திற்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஜூன் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை கூட்டம் சட்டரீதியற்றது என தெரிவித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியகுழு உறுப்பினர்களான சுதாகரன் மற்றும் சூ.சூரியபிரபாவினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன் முன்தினம் குறித்த வழக்கானது வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குறித்த வழக்கின் எதிராளிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத நிலையில் வழக்கு ஜூன் மாதம் 19ஆம் திகதிக்கு திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி ஈரப்பெரியகுளம் பொது நோக்கு மண்டபத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபை கூட்டம் இடம் பெற்றிருந்தது.

குறித்த பொதுச் சபை கூட்டத்தில் பல தீர்மானங்களும் சில பதவி நியமனங்களும் இடம்பெற்றிருந்தன. ஆனால் அவ்வாறு இடம்பெற்ற கூட்டமானது கட்சியின் யாப்பு விதிகளை மீறியதாக காணப்பட்டதாலும் தேர்தல் ஆணைக் குழுவின் விதிகளுக்கு எதிராக காணப்பட்டதாலும் குறித்த பொதுச்சபை கூட்டமானது ஒரு சட்ட ரீதியான கூட்டமில்லை என்பதுடன், அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் தீர்மானங்கள், நியமனங்கள் சட்ட ரீதியற்றது என்ற ரீதியில் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நக்கிள்ஸ் வனப்பகுதியில் சட்டவிரோத களியாட்டம்!

கொழும்பு, மே. 15

பாதுகாக்கப்பட்ட நக்கிள்ஸ் வனப் பகுதிக்குள் பேஸ்புக் நண்பர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட களியாட்ட நிகழ்வில் கலந்துகொண்ட ஐந்து பெண்கள் உட்பட 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஹுன்னஸ்கிரிய வன வள அலுவலக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்டாரவளை, கொழும்பு, பதுளை மற்றும் கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப் பட்டவர்களில் பல்கலைக்கழக மாணவர்கள், பாதுகாப்புப் படையினருடன் தொடர்புடையவர் என கூறப்படும் நபரொருவர் மற்றும் தனியார் துறை ஊழியர்களும் அடங்குவர்.

பேஸ்புக் மற்றும் பிற சமூக ஊடக தளங்கள் மூலம் இந்த களியாட்ட நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன், வனப் பகுதிக்குள் முறையான அனுமதி பெறாமல் இந்த நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

வனவள அலுவலக அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையில், இவர்கள் பாதுகாக்கப்பட்ட நக்கிள்ஸ் வனப் பகுதிக்குள் சனிக்கிழமை இரவு சென்று நிகழ்வை நடத்தியமை தெரிய வந்துள்ளது. (அ)

# சந்நிதி-கதிர்காமம் பாதயாத்திரை குழு 3 நாட்களில் உமையாள்புரம் சென்றது!


காரைதீவு, மே. 15

சந்நிதி-கதிர்காமம் பாத யாத்திரை குழுவினர் நான்கு நாட்களில் உமையாள்புரத்தை சென்றடைந்தனர். அங்கு அவர்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரை யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமானது தெரிந்ததே.

நேற்று செவ்வாய்க்கிழமை நான்காவது நாள் குழுவினர் இயக்கச்சி சென்று ஆனையிறவு பாலத்தினூடாக உமையாள் புரத்தைச் சென்றடைந்தனர்.

இதேவேளை நேற்று முன் தினம் மூன்றாவது நாள். அன்று



துர்காபுரம் துர்க்கை அம்மன் ஆலயத்திலிருந்து பளை அம்மன் கோவிலைச் சென்றடைந்து

தொடர்ந்து பாதயாத்திரை குழுவினர் மீண்டும் பளை நரசிம்ம வைரவர் ஆலயத்தை சென்றடைந்தனர்.

பளை நரசிம்ம வைரவர் ஆலயத்தில் பலத்த வரவேற்பைப் பெற்றது. அங்கு ஓம் ரீ.வீ. நிறுவனத்தினர் பாதயாத்திரீகர்களுக்கு பொதிகளை வழங்கினர். (அ)

# பெண்களின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றில் உயர்த்தப்படும்

கொழும்பு, மே. 15

பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக 2 புதிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே இது தொடர்பான சட்டமூலங்களை தனிப்பட்ட உறுப்பினர்களின் பிரேரணைகளாக முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு அரசியல் கட்சியிலும் 30 சதவீதத்துக்குக் குறையாமல் பெண்களின் பிரதிநிதித்துவத்தை சேர்க்கும் வகையில், பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான பிரேரணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், 22 அரசியலமைப்புத் திருத்தமாக, ஒரு அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசியப் பட்டியலில் 50 வீதத்துக்குக் குறையாத பெண் உறுப்பினர்களை உள்ளடக்கும் சட்டமூலமாக பாராளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்த போதிலும் அதற்கு நல்ல பதில் கிடைக்காத காரணத்தினால் உரிய கோரிக்கையை சட்டமாக கொண்டு வர தீர்மானித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். (அ)

# ரயிலுடன் உழவு இயந்திரம் மோதி ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 15

கொஸ்கொடை பகுதியில் துவேமோதர ரயில் கடவையில் சிறிய ரக உழவு இயந்திரம் ரயிலுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு மாத்தறையில் இருந்து கொழும்பு மருதானை நோக்கி பயணித்த அதிவேக ரயிலில் மோதியே விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த உழவு இயந்திரச் சாரதியும் அவருடன் பயணித்த நபரும் பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். தெஹிகஹவெல பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மற்றைய நபர் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அதிக வேகத்துடன் பாதுகாப்பற்ற வகையில் மோ.சைக்கிள் ஓட்டிய 14 இளைஞர்கள் கைது!

கொழும்பு, மே. 15

மஹரகமை - டேங்கோ போர்ட் சந்தியிலிருந்து பன்னிபிட்டிய நோக்கி அதிவேகமாக பாதுகாப்பற்ற வகையில் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திச் சென்ற 14 இளைஞர்கள் மஹரகமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பந்தயப் போட்டியில் கலந்து கொண்டுள்ளதுடன், இணையத்தில் வெளியான செயலி மூலம் அவர்கள் குறித்த போட்டியில் இணைந்ததாகவும் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இதேநேரம் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் நுகேகொடை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொடை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் போட்டியில் பயன்படுத்தப்பட்ட 21 மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தல்களை தடுப்பது நல்லிணக்கத்துக்கு சாவு மணி

## சந்திரகுமார் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, மே. 15

சர்வதேசத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட நிலைமாறுகால நீதி பொறிமுறையில் நினைவேந்தல் மிக முக்கிய பகுதியாகும். எனவே அந்த நினைவேந்தல் நிகழ்வை கூட தமிழ் மக்கள் மேற்கொள்ள முடியாத படி அரசும் அதன் கட்டமைப்பான பொலீஸாரும் மேற்கொள்ளும் தடை நடவடிக்கைகள் இந்த நாட்டின் நல்லிணக்கத்தின் மீது அடிக்கும் சாவு மணியே, என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்-

2009 இல் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டார்கள், கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்ந்து தங்களை ஆற்றுப்படுத்திக்கொள்வதற்கு கூட முடியாத அளவுக்கு இலங்கையில் தமிழ் மக்கள் மீது அடக்கு முறை பிரயோகிக்கப்படுகிறது. தெற்கிற்கு ஒரு நீதி வடக்கிற்கு ஒரு நீதி என்ற நிலைப்பாட்டில் தமிழ் மக்கள் மீதான் செயல் பாடு கள் முன்னெடுக்கப்படுகிறது. இந்த சிறிய தீவில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய அரசும் அதன் கட்டமைப்பு பாரபட்சமாக நடந்து கொள்வது என்பது ஒரு காலமும் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது. இனங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படாதபோது இலங்கையில் ஒரு போதும்



நிலையான சமாதானம் ஏற்படாது.

யுத்தம் முடிவுக்கு வந்து 15 வருடங்கள் ஆகின்ற போதும் இனங்களுடைக்கிடையே இடைவெளியும் கூடிக்கொண்டே போகிறதே தவிர குறைவதாக தெரியவில்லை.

பாதிக்கப்பட்ட ஒரு இனத்தின் உணர்வுகளை புரிந்து கொண்டு, நல்லிணக்கத்தை வலுப்படுத்த வேண்டுமே தவிர வெற்றிப்பெற்ற மனநிலையில் இருந்து கொண்டு தமிழ் இனத்தை கையாள்வது கவலைக்கும் கண்டனத்திற்கும் உரியது. எனவே இந்த அரசு உடனடியாக தமிழ் மக்கள் மீதான இவ்வாறான அடக்கு முறைகளை கைவிட வேண்டும். உறவுகளை நினைவேந்தும் உரிமைகளில் அரசோ அதன் கட்டமைப்போ தலையிடக் கூடாது. தமிழ் மக்களை தொடர்ந்தும் காயப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதனை நிறுத்தி நல்லிணக்கத்தை வளர்தெடுக்க முயற்சிக்க வேண்டும்-என்றுள்ளது. (அ)

# இரட்டைக் குடியுரிமை தொடர்பில் விசாரணை நடத்தும் திறனில்லை

## கைவிரித்தது தேர்தல் ஆணைக்குழு

எந்தவொரு தேர்தலுக்கும் வேட்புமனு தாக்கல் செய்யும் நபர்களின் இரட்டைக் குடியுரிமை குறித்து விசாரணை நடத்தும் திறன் தனது ஆணையத்திற்கு இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட ஒருவர் தேர்தலில் போட்டியிட்டால் அவர்களுக்கு எதிராக எந்தவொரு நபரும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என அதன் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அந்தந்த தேர்தல்களுக்குரிய சட்டமூலங்களுக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ள மாத்திரமே எங்களால் முடியும். சட்டங்களை மீறி எங்களால் செயல்பட முடியாது.

குறித்த ஒரு நாளிலேயே வேட்புமனு தாக்கல் செய்ய வழங்கப்படுகின்றது. இந்த குறுகிய காலப்பகுதிக்குள் இவ்வாறான விசாரணைகளை மேற்கோள்ள முடியாது, அதற்கான திறனும் எங்களிடம் இல்லை என சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பாக அண்மையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு தொடர்பிலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கருத்து வெளியிட்டார்.

ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவது அவசியம். தேர்தல் தொடர்பிலான கேள்விகள் தொடர்ச்சியாக எழுப்பப்பட்டு வருவதால் அரசியலமைப்பின்படி, தேர்தலை நடத்துவோம் என்ற ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஆகவே, எதிர்வரும் ஜூலை மாதம் 17 ஆம் திகதிக்கு பின்னர் தேர்தல் தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்புகளை எதிர்ப்பார்க்கலாம் எனவும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# டயானா கமகேக்கு கடவுச்சீட்டு; விசாரணை நடத்தப்படவேண்டும்

## முஜிபுர் ரஹ்மான் கோரிக்கை

கொழும்பு, மே. 15

டயானா கமகே இந்த நாட்டு பிரஜை அல்ல என்பதை ஜனாதிபதியும் அரசாங்கமும் அறிந்திருந்தும் ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக செயற்படுத்த அவரை தவறாக பயன்படுத்தி வந்துள்ளது. அத்துடன் எமது நாட்டு பிரஜை அல்லாத டயானாவுக்கு குடிவரவு குடியகல்வு முன்னாள் கட்டுப்பாட்டு அதிகாரி கடவுச்சீட்டு விநியோகிக்க மறுத்துள்ளபோதும் தற்போதுள்ள கட்டுப்பாட்டு அதிகாரி எவ்வாறு கடவுச்சீட்டு விநியோகித்தார் என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேண்டி கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டுச் சென்றேன். ஆனால் அரசாங்கம் பணம் இல்லை என தெரிவித்து தேர்தலை நடத்தாமல் விட்டு விட்டது.

நான் நேர்மையாகவே எனது பதவியை இராஜினாமா செய்தேன். அதனாலே நான் மீண்டும் இந்த சபைக்கு வர முடிந்தது. ஆனால் டயானா கமகே நேர்மையற்ற முறையில் செயற்பட்டு வந்ததால், அவருக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல் போயுள்ளது.

டயானா கமகே இந்த நாட்டுப் பிரஜை அல்ல என்பதை அவர் ஆரம்பத்தில் எங்களுக்கும் மறைத்திருந்தார். அது தொடர்பான உண்மை எமக்கு தெரியவந்ததுடன் அது தொடர்பில் நாங்கள் நீதிமன்றில் முறையிட்டோம்.

ஆனால் ஜனாதிபதியும் அரசாங்கமும் டயானாவை பாதுகாத்து வந்தது. ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராகவும் சஜித் பிரேமதாசவுக்கு எதிராகவும் செயற்பட அரசாங்கம் அவரை வழிநடத்தி வந்தது. அதனாலே பாராளுமன்றத்தில் ஒவ்வொரு முறையும் எமது கட்சித் தலைவருக்கு எதிராக அவர் உரையாற்றி வந்தார்.

அதேநேரம் டயானா கமகே இராஜதந்திர கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள விண்ணப்பித்திருந்தபோது, அவர் இந்த நாட்டு பிரஜை அல்ல என தெரிவித்து, அவருக்கு கடவுச்சீட்டு விநியோகிக்க முடியாது என குடிவரவு குடியகல்வு முன்னாள் கட்டுப்பாட்டு அதிகாரி பாராளுமன்ற முனனாள் செயலாளருக்கு அறிவித்திருந்தார்.

அத்துடன் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நான் இந்த சபையில் உரையாற்றும் போது, இந்த சபையில் வெளிநாட்டு பிரஜை ஒருவர் இருக்கிறார். அது தொடர்பில் தேடிப் பார்க்குமாறு சபாநாயகரை கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்வரை சபாநாயகர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேலும் டயானா கமகேவுக்கு இராஜதந்திர கடவுச்சீட்டு விநியோகிக்க முடியாது என குடிவரவு குடியகல்வு முன்னாள் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்திருந்தபோதும் தற்போதுள்ள கட்டுப்பாட்டு அதிகாரி கடந்த 2022, 09, 12ஆம் திகதி அன்று அவருக்கு இராஜதந்திர கட்வுச்சீட்டு விநியோகித்துள்ளார்.

அப்போது நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எமது நாட்டு பிரஜை அல்லாத ஒருவருக்கு தற்போதுள்ள குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டு அதிகாரிஎந்த அடிப்படையில் கடவுச்சீட்டு விநியோகித்தார். அவருக்கு அதற்காக யார் அழுத்தம் கொடுத்தார் என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (அ)



# டொனால்ட் லூவை சந்தித்த தேசிய மக்கள் சக்தியினர்

கொழும்பு, மே. 15

இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவிச் செயலாளர் டொனால்ட் லுவுக்கும் தேசிய மக்கள் சக்தி பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங்கும் கலந்துகொண்டார்.

இதில் இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை, சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துதல் மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இரு தரப்பும் கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் தேசிய செயற்குழு உறுப்பினர்களான பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், வசந்த சமரசிங்க மற்றும் கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸ ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஓ.எல். பெறுபேறு வெளியாக முன் ஏ.எல். வகுப்பு ஆரம்பிக்க அனுமதி

கொழும்பு, மே. 15

கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாவதற்கு முன்னதாக உயர்தரத்திற்கான வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சர் முன்வைத்த யோசனைத் திட்டத்திற்கு அமைச்சரவை இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

இதற்கமைய கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிவரும் மாணவர்களுக்கான உயர்தர வகுப்புகளை எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வி பொதுத்தராதர சாதாரண தரம் வரை மாத்திரம் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் பாடசாலை மாணவர்களை உயர்தரத்திற்காக அருகிலுள்ள பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர்தர வகுப்புகளில் குறிப்பிட்ட பாடத்திட்டம் உரிய பாடசாலையில் கற்பிக்கப்படாவிடின், அந்த பாடத்திட்டம் கற்பிக்கப்படும் பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுப்புவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை பரீட்சை அட்டவணைகளை வழமைக்கு கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு அமைவாகவே இந்த திட்டம் முன்னெடுக்கப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்னர் தெரிவித்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் பரவும் இன்புளுவென்சா காய்ச்சல்

## எச்சரிக்கை விடுக்கும் வைத்தியர்கள்

கொழும்பு, மே. 15

**நாடளாவிய ரீதியில் காய்ச்சல் பரவிவரும் நிலையில், சடுதியான காய்ச்சல், இருமல், தொண்டைபுண், மூக்கில் இருந்து சளி அல்லது திரவம் வடிதல், மூக்கு அடைப்பு மற்றும் உடல் வலி, தலைவலி போன்ற அறிகுறிகள் இருக்குமாயின் எச்சரிக்கையாக இருக்குமாறு சுகாதார அமைச்சின் விசேட வைத்திய நிபுணர்கள் சிவப்பு எச்சிரிக்கை விடுத்துள்ளனர்.**

இந்த காய்ச்சல் நிலவரம் தொடர்பாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தைகள் நல வைத்தியர் தீபால் பெரேரா ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

இதனடிப்படையில், குழந்தைகள் மத்தியில் மிகவும் வேகமாக இந்த நோய் தொற்று காணப்படுவதாகவும், பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகள் மீது உன்னிப்பாக அவதானம் செலுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகவும் இவ்வாறான தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

அவர்களை பரிசோதித்ததில் "இன்ஃபுளுவென்சா ஏ" தொற்று அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், "இன்ஃபுளுவென்சா பி" தொற்றும் பரவலாக காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்கூறிய அறிகுறிகள் இருப்பின் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்லுங்கள். அசட்டைதனமாக இருந்துவிடவேண்டாம். இன்ஃபுளுவென்சா போன்ற நோய்களால் பாதிக்கப்படக் கூடியவர்களில் கர்ப்பிணித் தாய்மார்கள், இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள், 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்கள் மற்றும் நாட்பட்ட நோய்கள் ஆகியோர் அடங்குவர்.

கொழும்பு, ராகம, களுபோவில, நீர்கொழும்பு வைத்தியசாலைகள், லேடி ரிட்ஜ்வே சிறுவர்களுக்கான வைத்தியசாலை மற்றும் தொற்று நோய் வைத்தியசாலை உட்பட 20 வைத்தியசாலைகளில் இன்ஃபுளுவென்சா போன்ற நோய் கண்காணிப்பை அதிகரிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் தேசிய காய்ச்சல் நிலையங்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அதன்படி, மாதிரிகள் தினசரி தேசிய காய்ச்சல் ஆய்வகத்திற்கு அனுப்பப்படுகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# மக்களின் நெருக்கடிகளை பெரமுன உணரவில்லை!

## கூறுகிறார் எஸ்.எம்.மரிக்கார்



கொழும்பு, மே. 15

பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் ஆணை இல்லை என்பதனால் மக்களின் அன்றாட வாழ்க்கை நிலை தொடர்பில் அறியாமையில் செயற்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன நேற்று சபையில் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்குப் பதிலளித்து உரையாற்றியபோதே எஸ்.எம்.மரிக்கார் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட எரிபொருள் எரிவாயு தட்டுப்பாடு இல்லை என அரசாங்கம் கூறுகின்றது.

பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் ஆணை இல்லை என்பதனால் மக்களின் அன்றாட வாழ்க்கையில் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி தொடர்பில் அவர்களுக்கு தெரியாதுள்ளது.

எரிவாயு எரிபொருள் கையிருப்பு உள்ளபோதிலும் அவற்றை கொள்வனவு செய்வதற்கு மக்களிடம் பணம் இல்லை.

மின் தடை அமுல்படுத்தப்படாத போதிலும் நாட்டில் சுமார் ஒரு இலட்சம் மக்களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.


சுகாதார சேவை இன்று மிகவும் மோசமடைந்துள்ளது. நாட்டு மக்கள் எதிர்காலம் தொடர்பில் அச்சத்துடனேயே வாழ்கின்றனர்.

இந்த நாடு இன்னும் வங்குரோத்து நிலையிலேயே உள்ளது. நாட்டின் கடன் தொகை மேலும் அதிகரித்துள்ளது.

இதனால் அடுத்தவருடம் வரி விதிப்பு மேலும் அதிகரிக்கப்படும் நிமையும் காணப்படுகின்றது-என்றார்.

(அ)

# ஒன்றாக பிறந்த 3 சகோதரிகளுக்கு ஒரே மேடையில் திருமண நிகழ்வு!



கொழும்பு, மே. 15

ஒரே பிரசவத்தில் பிறந்த சகோதரிகளான 3 யுவதிகளுக்கு ஒரே மேடையில் திருமணம் நிகழ்ந்தது.

கதிர்காமம் தெட்டகமுவ பகுதியில் கடந்த 10ஆம் திகதி இந்த திருமணம் இடம்பெற்றுள்ளது.

23 வயதான திலும் விந்தியா, கெயுமி திசாரா, வித்மி ஹன்சா ஆகிய மூன்று யுவதிகளும், வீரகெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த ஹர்ஷ மதுஷன், ரன்ன நெடோல்பிட்டியவைச் சேர்ந்த கலப்பிட்டி வடுகே பிரேமச்சந்திர மற்றும் லுணுகம்வெஹெரவை சேர்ந்த விக்கிரமசிங்க சின்ஹாராச்சி கசுன் ஆகியோரை திருமணம் செய்தனர்.

பல நாட்களாக தனது மகள்களின் திருமண கொண்டாட்டங்களில் மும்முரமாக செயற்பட்டதால் தற்போது களைப்படைந்துள்ளதாக தெரிவித்துள்ள தந்தை சுஜித் நிஷாந்த, எனது மூன்று மகள்களும் ஒன்றாக திருமணம் செய்தது மகிழ்ச்சியானது என்றார்.

ஒரே சூழில் பிரசவித்த சகோதரிகளான அவர்கள், கதிர்காமம் தேசிய பாடசாலைக்கு ஒன்றாகச் சென்றார்கள்.

"சரியான நேரத்தில், மூன்று நல்ல மகன்களைக் கண்டுபிடித்து அவர்களின் விருப்பப்படி திருமணம் செய்து வைத்தோம். இந்த மூவருக்கும் ஒரே நாளில் திருமணம் நடந்ததில் எனக்கும் என் மனைவிக்கும் மிகுந்த மகிழ்ச்சி. 23 வருடங்கள் கண்போல் வளர்த்த குழந்தைகளை திருமணம் செய்து வைப்பது மகிழ்ச்சியாக இருந்தாலும், அவர்களை பிரிவது வருத்தமாகவும் இருக்கிறது" என தாயார் பி.எம்.கே.இந்திராணி தெரிவித்தார்.

# இஸ்ரேல் அரசின் அடக்குமுறை உடன் நிறுத்தப்படவேண்டும்!

## சபையில் சஜித் வேண்டுகோள்

கொழும்பு, மே. 15

காஸா மீதான இஸ்ரேல் அரசின் அனுசரணையுடனான இராணுவ அடக்குமுறை உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய இஸ்ரேல் அரசாங்கம் பலஸ்தீன் மக்களின் பூமியை ஆக்கிரமித்துக் கொண்ருக்கின்றது.

புதிய மக்கள் குடியிருப்பை உருவாக்கிக் கொண்ருக்கின்றது.

காஸா பகுதியில் இன்று செயற்படுத்தப்படுகின்ற மனிதப் படுகொலையானது பூமியில் இருக்கின்ற மக்களை அழித்தொழிக்கின்ற செயற்பாடாக இருக்கின்றது.

அங்கு மக்களை அழிக்கப் பார்க்கிறார்கள், மருத்துவமனைகளுக்கு குண்டு வீசுகின்றார்கள், பாடசாலைகளுக்கு குண்டு வீசுகின்றார்கள், இஸ்ரேல் அரசாங்கம் மேற்கொள்கின்ற மனிதப் படுகொலை அரச பயங்கரவாதத்தை கடுமையாக கண்டிக்கின்றோம்.

எல்லோரும் நடுநிலைக்கு வந்து தீர்வைக் காண வேண்டும். ஆனால் இன்றைய இஸ்ரேல் அரசாங்கம் அடிப்படைவாத நிலைப்பாட்டில் இருந்துகொண்டு மேற்கொள்கின்ற மனிதப் படுகொலை ஹிட்லர்



யூதர்கள் மீது மேற்கொண்ட குற்றத்திற்கு ஒத்ததானதாகும்.

பலஸ்தீன மக்களை முற்றுமுழுதாக அழித்தொழிப்பதற்கு துடிக்கின்றது. ஆதலால் அரச பயங்கரவாதம் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

நிரந்தரமான நட்பு உணர்வை இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் நாம் உருவாக்குவதற்கு செயற்பட வேண்டும்.

மனிதாபிமானமற்ற தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. பிள்ளைகள், தாய்மார், பெண்கள், யுவதிகள், இளைஞர்கள் என ஒட்டுமொத்த பலஸ்தீன மக்களும் அழிப்பதற்கான இந்த முயற்சியை இராணுவ நடவடிக்கையை கடுமையாக கண்டிக்கின்றோம்.

சமாதானத்திற்கு இடமளிக்க வேண்டும். அந்த அழிப்பிற்கு நெதர்னியோ பிரதமர் பொறுப்புக்கூற வேண்டும். ஹிட்லருடைய ஆட்சியில் யூதர்கள் மிலேச்சத்தனமாக அழிக்கப்பட்டார்கள் அதுபோலவே இஸ்ரேல் அரசும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இன்றைய இலங்கைப் பாராளுமன்றத்திலே இன்று நான் பிரகடனம் செய்கிறேன், எந்த தாமதமும் பின்னடைவும் இல்லாமல் இஸ்ரேலினுடைய அரச அனுசரனையுடனான அரச பயங்கரவாதம் நிறுத்தப்பட வேண்டும். இராணுவ அடக்குமுறை நிறுத்தப்பட வேண்டும்.

இந்த அழிவுகள் மனிதன் என்ற வகையில் எவராலும் தாங்க முடியாதவை. இதனால் இவை உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்களுக்கு ஒரு பாரிய பொறுப்பு இருக்கின்றது. சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் பெயரில் இந்த படுகொலையை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். பலஸ்தீன மக்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும்.

அவர்களுக்கான வாழ்வுரிமையை பாதுகாக்க வேண்டும். உயிர் வாழ்வதற்கான உரிமையை பாதுகாக்க வேண்டும். இது மனிதநேய பிரச்சனையாக இருக்கின்றது. உலகம் மௌனமாக பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இதனை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்-என்றார்.

(அ)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்க முற்பட்டவர்களை தடுக்க கல்முனை பாண்டிருப்பில் பொலிஸார் குவிப்பு!

அம்பாறை, மே. 15

**அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்க முற்பட்டவர்களை தடுப்பதற்கு நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.**

இந்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதுடன் இச்சம்பவத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் புஸ்பராஜ் துஷானந்தன், அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி தம்பிராசா செல்வராணி ஆகியோருக்கு பொலிஸாரினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டு குறித்த நிகழ்வு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.



இதன்போது, கல்முனை பாண்டிருப்பு அரசடி அம்மன் ஆலய முன்றலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கம் பொதுமக்களுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வை முன்னெடுத்திருந்தது.

எனினும், சம்பவ இடத்திற்கு வருகை தந்த பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க தலைமையிலான பொலிஸார் கல்முனை நீதிவான் நீதிமன்ற தடை உத்தரவை காண்பித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் புஸ்பராஜ் துஷானந்தன் என்பவருக்கு தடை உத்தரவு உள்ளதாகவும், எனவே முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களை நினைவு கூரும் முகமாக ஏற்பாடு செய்துள்ள குறித்த நிகழ்வை நிறுத்துமாறும் கூறி தடை உத்தரவை வழங்கினர்.

அத்துடன், அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி பொலிஸாரினால் எச்சரிக்கப்பட்டு அவ்விடத்தில் இருந்து செல்லுமாறு பணிக்கப்பட்டார். (அ)

# குடுவில் அறபா நகரில் இலவச மருத்துவ முகாம்

அம்பாறை, மே. 15


கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் குடுவில் அறபா நகரில் மருத்துவ முகாம் ஒன்றினை நடத்துமாறு பணிப்புரை விடுத்ததற்கமைவாக, இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவ முகாம் அண்மையில் இடம்பெற்றது.

பிராந்திய பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் இறக்காமம் பிரதேச வைத்தியசாலையும், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயமும் இணைந்து குறித்த மருத்துவ முகாமில் சேவைகளை வழங்கின.

அதிகஷ்டப் பிரதேசமாக காணப்படும் குடுவில் அறபா நகரில் வசிக்கும் மக்களுக்கு குறித்த மருத்துவ முகாம் மிகவும் பயனுள்ளதாக அமைந்ததுடன், அதிகமானோர் கலந்து கொண்டு சிகிச்சையும் பெற்றுக் கொண்டனர்.

குறித்த மருத்துவ முகாமை நடாத்துவதற்கு பணிப்புரை விடுத்த பணிப்பாளர் மற்றும் மருத்துவ முகாமில் கலந்து கொண்டு சிகிச்சையளித்த வைத்தியர்கள், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் அறபா நகர் மக்கள் இதன்போது நன்றி தெரிவித்தனர்.

அறபா நகர் மக்கள் சுகாதார சேவையினை பெற்றுக்கொள்வதற்கு அதிக தூரம் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளதுடன், போக்குவரத்திற்காக மாத்திரம் பெருந்தொகைப் பணத்தினை செலவிடுவதாகவும் தெரிவிக்கின்றனர். இதுபோன்ற மருத்துவ முகாமை தொடர்ந்தும் நடத்துமாறு கேட்டுள்ளனர்.



# மூதூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி!



மூதூர், மே 15

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலை மூதூர் பிரதேசத்துக்குட்பட்ட சீனன்வெளி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனின் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தலின் ஆரம்பத்தில் முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதி யுத்தத்தில் உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (எ)

# சுவாமி விபுலானந்தர் ஆண்டை முன்னிட்டு கணேஷா மாணவர்கள் விளையாட்டு விழா

அம்பாறை, மே. 15

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுல அறநெறி பாடசாலைகளில் ஒன்றான திருக்கோவில், விநாயகபுரம் ஸ்ரீ கணேஷா அறநெறி பாடசாலை பிள்ளைகளின் பாரம்பரிய கலை, கலாசார விளையாட்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வு திருக்கோவில் உதய சூரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

ஸ்ரீ கணேசா அறநெறி பாடசாலை நாடாத்திய இச் சித்திரை விளையாட்டு போட்டி நிகழ்வு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு நினைவாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.




அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் பணிப்பாளர் கண.இராஜரத்தினம் (கண்ணன்) மற்றும் திருக்கோவில் கோட்ட கல்விப்பணிப்பாளர் சோ.ரவீந்திரன், ஆசிரியர்களான ஜனா, தர்மசீலன் மற்றும் அறநெறி ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# சுற்றுமதிலற்ற நிலையில் காரியப்பர் வித்தியாலயம்

அம்பாறை, மே. 15

சாய்ந்தமருதில் எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம் மிகவும் பின்தங்கிய ஒரு பாடசாலையாகக் காணப்படுகிறது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீள்குடியேற்றப்பட்ட மக்களின் பிள்ளைகள் அதில் கல்வி கற்கின்றனர்.

இந்தப் பாடசாலையில் 100 மீற்றர் நீளமான சுற்றுமதில் கட்டப்படாமல் உடைந்த நிலையில் காணப்படுகிறது.



அந்த சுற்றுமதில் கட்டப்படாமையின் காரணமாக சுற்றுமதில் அற்ற அந்த இடங்களில் இருந்து துர்நாற்றம் வீசக் கூடிய குப்பை கூழங்கள் அவ்விடத்தில் வீசப்படுவதுடன் துஷ்பிரயோக நடவடிக்கைகளும் இதன்மூலம் ஏற்படுகின்றன.

அதாவது போதைப்பொருள் பாவனையாளர்கள் பாடசாலைக்கு வருவதூடாகவும் உள்ளே இருந்துகொண்டு அதனைப் பாவிப்பதாகவும் அதனைக் கைமாற்றும் இடமாக இப்பாடசாலையைப் பயன்படுத்துவதற்கும் இந்த சுற்றுமதில் இல்லாததுதான் மிகப்பெரும் காரணம்.

ஆகவே, காலத்தின் கட்டாயம் அந்த சுற்றுமதிலை அவசியமாக அதேநேரம், அவசரமாகச் செய்யவேண்டியுள்ளது.

பல அரசியல்வாதிகளிடமும் இந்த சுற்றுமதிலைச் செய்து தருமாறு பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் பலரிடமும் பல தடவைகள் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்தார். ஆனால், இது விடயமாக எந்த அரசியல்வாதியும் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தவில்லை. கிஞ்சித்தும் செவி சாய்க்கவும் இல்லாது பாராமுகமாகவே இருக்கின்றனர்.


அரசியல்வாதிகள், எம்.பிமார்கள் பலர் தற்பொழுது அவர்களது பண்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பல பல செயல்பாடுகளுக்கு அவர்களது சொந்த நிதியைப் பயன்படுத்தி வருகின்றனர். (அ)

# போக்குவரத்து பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கல்

திருமலை, மே. 15

பாடசாலைகளுக்கு முன்பாக பொலிஸாரின் கண்காணிப்புடன் பாடசாலை நேரத்தில் மாணவர்கள் வீதி விதிமுறைகளைப் பேணுவதற்காக பாடசாலை மாணவர்களுக்குப் போக்குவரத்து பாதுகாப்பு உபகரணங்களைக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கினார்.

மாணவர்களின் பாதுகாப்பு கருதி 30 நாட்களுக்குள் அனைத்து பாடசாலைகளின் முன்பாகவும் வேகத் தடைகளை உடனடியாக அமைக்க அனைத்து வீதி அதிகார சபைகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனின் போர் வெற்றியை அமெரிக்கா உறுதிப்படுத்தும்!


## ஜெலென்ஸ்கியிடம் நேரில் உறுதி செய்தார் அன்ரனி பிளிங்கன்


கீவ், மே 15

**உக்ரைனுக்கான பங்காளிகளுடன் சேர்ந்து போர் களத்தில் நீங்கள் வெற்றி பெறுவதை உறுதி செய்ய நாம் துணையாக பின்னிற்போம் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியிடம் உறுதியளித்தார் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளிங்கன்.**

உக்ரைனுக்கு நேற்றைய தினம் சென்ற அமெரிக்க வெளிவிவகார செயலர் அன்ரனி பிளிங்கன், "இராணுவ உதவிகள் வந்து கொண்டிருக்கின்றன - சில இராணுவ உதவிகள் ஏற்கனவே வந்துவிட்டன. இன்னும் சில வரவுள்ளன. இந்த உதவிகள் ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிராக உண்மையான மாற்றத்தை இது ஏற்படுத்தும்.

"உக்ரைனுக்கான பங்காளிகளுடன் சேர்ந்து போர் களத்தில் நீங்கள் வெற்றி பெறுவதை உறுதி செய்ய நாம் துணையாக பின்னிற்கிறோம் - என்றும் இந்த சந்திப்பில் அன்ரனி பிளிங்கன் உறுதியளித்திருந்தார். (ஐ)





# விருந்தில் துப்பாக்கிசூடு; மூன்று பேர் உயிரிழப்பு!

வாஷிங்டன், மே 15

மே தினத்தைத் தொடர்ந்து அதன் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட விருந்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்தனர்.

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் ஸ்டாக்டன் நகரில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஆயிரக்கணக்கானவர்கள் கூடிய இந்த விருந்தில் இரு தரப்பினரிடையே வாக்குவாதம் முற்றியது. இதன்போது, மர்ம நபர்கள் சிலர் தாங்கள் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து சுட ஆரம்பித்தனர்.

அங்கிருந்தவர்கள் தம்மை பாதுகாக்க ஓடினர். இதன் போது 18 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் மூவர் உயிரிழந்தனர். 15 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# கார்கீவ் போர் முனையில் ரஷ்யா முன்னேறுகின்றது



கார்கீவ், மே 15

தங்கின் வடகிழக்கு பிராந்தியமான கார்கீவின் போர் முனைகளில் ரஷ்ய படையினர் முன்னேறி வருகின்றனர் என்று உக்ரைன் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில்,

கார்கீவ் பிராந்தியத்தில் ரஷ்ய படையினர் தொடர்ந்து முன்னேறி வருகின்றனர். அங்குள்ள போர் முனைகளில் அவர்களின் போர் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறுகின்றன.

ரஷ்ய எல்லையிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள வாவ்சான்ஸ்க் நகரின் புகர்ப் பகுதிகளில் ரஷ்ய படையினருக்கும் உக்ரைன் இராணுவத்தினருக்கும் இடையே கடுமையான சண்டை நடைபெற்றுவருகிறது. அந்தப் பகுதிகளிலும் ரஷ்ய படையினர் முன்னேறி வருகின்றனர்.

இது தவிர, பைல்னா கிராமத்தைச் சுற்றிலும் ரஷ்ய - உக்ரைன் ராணுவத்தினர் கடும் மோதலில் ஈடுபட்டுள்ளனர். இதில் ரஷ்ய இராணுவத்துக்கு மிகப் பெரிய சேதத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை உக்ரைன் படையினர் மேற்கொண்டு வருகின்றனர் - என்றுள்ளது. (ஐ)

# பாக். - காஷ்மீரில் போராட்டம் நடத்திய நால்வர் உயிரிழப்பு!

## மானிய அறிவிப்பை தொடர்ந்து போராட்டம் முடிவுக்கு வந்தது!


கராச்சி, மே 15

பாகிஸ்தான் நிர்வாகத்தின் கீழுள்ள காஷ்மீரில் பொருட்கள் விலையேற்றத்துக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறையில் 4 பேர் உயிரிழந்தனர். 100 பேர் வரை காயமடைந்தனர்.

மா, மின்சார விலை உயர்வை கண்டித்து ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளிக்கிழமை முதல் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

எனினும், பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீப் 24 பில்லியன் ரூபாய் பெறுமதியான மானியங்களை அறிவித்தார். இதைத் தொடர்ந்து மக்களின் போராட்டம் கைவிடப்பட்டது.

இதேவேளை இந்தப் போராட்டத்தில் உயிரிழந்த நால்வரில் ஒருவர் பொலிஸ் அதிகாரி. மற்றைய மூவரும் பொதுமக்களாவர்.



இதேவேளை போராட்டத்தில் உயிரிழந்தோரை நினைவேந்தும் விதமாக நேற்று செவ்வாய்க்கிழமையை பாகிஸ்தானின் காஷ்மீர் கறுப்பு தினமாக அனுஷ்டித்தது.

இந்தியா - பாகிஸ்தான் இடையே கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக காஷ்மீர் தொடர்பில் மோதல் போக்கு நீடித்து வருகிறது. இரு நாடுகளும் காஷ்மீரை இரு பகுதிகளாக நிர்வாகித்து வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்

மொஸ்கோ, மே 15

ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

உக்ரைன், ரஷ்யா இடையி லான போர் 2 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் இரு நாடு களும் மாறிமாறித் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. உக்ரைனுக்கு எதிரான தாக்குதலில் ரஷ்ய படைகள் தொடர்ந்து முன்னேறி வருகின்றன.

இந்நிலையில், ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு பதி லாக புதிய பாதுகாப்பு அமைச்சராக பெலோசோவ் முன்மொழியப்பட்டுள்ளார் என்று தக வல் வெளியாகியுள்ளது.

உக்ரைன் மீதான படையெ டுப்பு தொடங்கியதில் இருந்து ஜனாதிபதி புடின் மேற்கொண்ட மிக முக்கியமான மாற்றமாக இது கருதப்படுகிறது. (ஐ)



# பன்றியின் சிறுநீரகம் பொருத்திய மனிதன் திடீரென உயிரிழந்தார்!

வாஷிங்டன், மே 15

பன்றியின் சிறுநீரகம் பொருத்தப்பட்ட மனிதன் நேற்று முன்தினம் திடீரென உயிரிழந்தார். எனினும், அவரின் மரணத்துக்கும் உறுப்பு மாற்று சத்திர சிகிச்சைக்கும் தொடர்பு இல்லை என்று கூறப்பட்டது.

அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் மாநிலம், வேமவுத் நகரைச் சேர்ந்தவர் ரிச்சர்ட் ஸ்லேமன் (வயது 62). இவரின் சிறுநீரகம் செயலிழந்ததால் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் சிறுநீரகம் பொருத்தப்பட்டது.

பாஸ்டனில் உள்ள மாசசூசெட்ஸ் பொது மருத்துவமனையில் கடந்த மார்ச் 16ஆம் திகதி வெற்றிகரமாக உறுப்பு மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதன்பின்னர் அவரின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.

அவரின் உடல்நிலை முன்னேற்றமடைந்ததைத் தொடர்ந்து கடந்த ஏப்ரல் மாதம் அவர் வீடு திரும்பினார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அவர் திடீரென உயிரிழந்தார்.

எனினும், அவரின் மரண பரிசோதனைகளில் உறுப்பு மாற்று சத்திரசிகிச்சை விளைவால் அவருக்கு மரணம் சம்பவிக்கவில்லை என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய யுத்தக் களத்தில் இலங்கையர்கள் தற்கொலை குண்டுதாரிகளாக மாறுவர்!

## விசாரணையை மேற்கொள்ளுங்கள் என்கிறார் தயாசிறி



கொழும்பு, மே. 15

**ரஷ்ய யுத்த களத்தில் பாதிக்கப்பட்டுள்ள 600 இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வர இராஜதந்திர மட்டத்தில் துரித நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் இல்லையேல் இன்னும் 10 நாட்களுக்குள் இலங்கையர்கள் தற்கொலை குண்டுதாரிகளாக மாற்றப்படுவார்கள் என எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது-

ரஷ்யா- உக்ரைன் யுத்தம் தீவிரமடைந்துள்ள நிலையில் ஓய்வு பெற்ற இலங்கை இராணுவத்தினர் ரஷ்ய யுத்தக்களத்துக்கு சென்று பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளார்கள்.

தாம் யுத்தகளத்துக்கு செல்கிறோம் என்பதை அறியாமலே இவர்கள் அங்கு சென்றுள்ளார்கள்.இவ்விடயம் தொடர்பில் தேசிய மட்டத்தில் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு,ஓய்வுப் பெற்ற இரு மேஜர் ஜெனரல்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

தேசிய மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இராஜதந்திர மட்டத்திலும் துரித விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

ரஷ்ய - உக்ரைன் யுத்தத்தை இன்னும் 10 நாட்களுக்குள் முடிவுக்கு கொண்டு வருவதற்கு ரஷ்ய இராணுவம் தீர்மானித்துள்ளதாக அறிய முடிகிறது.

ரஷ்ய யுத்தக்களத்தில் இணைந்துள்ள இலங்கை இராணுவத்தினரை முன்னிலையில் அனுப்புவதற்கும், அவர்களை தற்கொலை தாக்குதல்தாரிகளாக மாற்றுவதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. ஆகவே இது பாரதூரமானது.இதனை மனிதாபிமான அடிப்படையில் ஆராய வேண்டும்.

இலங்கையில் இருந்து ரஷ்யாவுக்கு விசேட குழுவினரை அனுப்பி அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு இவர்களை நாட்டுக்கு அழைத்து வர வேண்டும்.சுமார் 600 இலங்கையர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆகவே இதனை அலட்சியப்படுத்த வேண்டாம்.துரிதமாக செயற்பட்டு இவர்களை நாட்டுக்கு அழைத்து வருமாறு அரசாங்கத்திடம் தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்-என்றார்.

(அ)

# ரஷ்ய-உக்ரைன் போரில் இலங்கை படையினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்தது அரசு



கொழும்பு, மே. 15

ரஷ்ய - உக்ரைன் போர் நடவடிக்கைகளுக்கு ஓய்வு பெற்ற இலங்கை படையினர் ஈடுபடுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

ரஷ்ய - உக்ரைன் போரில் கூலிப்படையினராக ஓய்வு பெற்ற இலங்கை இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படும் சம்பவத்துடன் அரசாங்கத்திற்கும் தொடர்பு உள்ளதா என பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபோட சபையில் கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக பதிலளித்து உரையாற்றிய போதே இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரஷ்ய - உக்ரைன் போர் நடவடிக்கைகளுக்கு ஓய்வு பெற்ற இலங்கை படையினர் ஈடுபடுத்தப்பட்ட ஆட்கடத்தல் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இலட்சக்கணக்கான பணம் பெற்று இந்த மோசடியுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படுவார்கள். இந்தப் பிரச்சினை இலங்கையில் மாத்திரம் அன்றி பல நாடுகளிலும் உள்ளது.

இருப்பினும், வெளிவிவகார அமைச்சு இந்த பிரச்சினைகளில் தலையிட்டு, அவர்களை நாட்டிற்கு அழைத்துவர அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்கும்.

அத்தோடு, இந்த ஆட்கடத்தல் சம்பவத்தின் முக்கியமானவர்கள் யார், இது எவ்வாறு இடம்பெறுகிறது என்பது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள புலனாய்வுத் துறை மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்-என்றார்.

(அ)

# சாவகச்சேரியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி!



யாழ்ப்பாணம், மே. 15

இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனின் ஏற்பாட்டில் சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு அருகே நேற்று முன் தினம் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி பவனியும் முன்னெடுக்கப்பட்டது.

இதன் பொழுது முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர் நீத்தவர்களை நினைவு கூர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டதோடு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

(அ)

# அதிகாரிகளின் பழிவாங்கலை எதிர்த்து மன்னாரில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்!

## நெடுங்கண்டல்புலவை திறந்துவிடுமாறு கோரிக்கை





மன்னார், மே 15

மன்னார் மாவட்ட சிறுபோக நெற்செய்கைக்கான புலவுகளை தெரிவு செய்வதில் அதிகாரிகளின் தனிப்பட்ட பழிவாங்கலை கண்டித்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

2024 ஆம் ஆண்டுக்கான சிறுபோகச் செய்கைக்காக நெடுங்கண்டல் புலவை திறந்து விடுமாறு கோரியும் அதிகாரிகளின் பழிவாங்கலை கண்டித்தும் மாந்தை மேற்கு விவசாயிகள் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது விவசாயிகள் மன்னார் மாவட்ட செயலகத்தின் நுழைவாயிலை முற்றுகையிட்டு, "அதிகாரிகளின் தனிப்பட்ட பழிவாங்கல்களுக்கு இடம் கொடுக்காதீர்கள்", "திறந்துவிடு திறந்துவிடு நெடுங்கண்டல் புலவை திறந்துவிடு", "கொல்லாதே கொல்லாதே விவசாயிகளை கொல்லாதே" உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி நின்றனர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்ட மாந்தை மேற்கு விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில்- மன்னார் மாவட்டத்தில் சிறுபோகச் செய்கையிடப்பட்ட காலந்தொட்டு இன்று வரை ஒருபோதும் நெடுங்கண்டல் புலவு பூட்டப்படவில்லை.

1974 ஆம் ஆண்டு நீர்த் தட்டுப்பாடு வந்தபோது கால போகத்தில் செய்கையிடப்படும் 40 ஏக்கருக்கு சிறுபோகத்தில் ஒரு ஏக்கர் என்ற தீர்மானத்தில் 40 : 1 என்ற விகிதத்தில் விவசாயம் செய்யப்பட்டபோது சின்ன உடைப்பு துலுசின் கீழ் உள்ள புலவுகள் மாத்திரம் திறக்கப்பட்டன.

இதில் நெடுங்கண்டல் புலவு முதன்மையானதாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு ஏற்பட்ட நீர்த் தட்டுப்பாடு காரணமாக அனைத்துப் புலவுகளும் பூட்டப்பட்டு, மன்னார் மாவட்ட விவசாயிகளின் விதைநெல் தேவைக்காக நெடுங்கண்டல் புலவு மாத்திரம் திறந்து விவசாயம் செய்யப்பட்டது.

இம்முறை எமது நெடுங்கண்டல் புலவு பூட்டப்பட்டதற்கான காரணத்தை அறிய, எமது கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் தனிப்பட்ட முறையில் உரிய அதிகாரிகளைச் சந்தித்து வினவியபோது, 2023 ஆம் ஆண்டின் புலவு பங்கீட்டில் தனிப்பட்ட நபர் ஒருவருடனான முரண்பாட்டுக்கு பழி தீர்க்கும் வகையில் இம்முறை எமது புலவு பூட்டப்பட்டுள்ளது என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொண்டுள்ளோம்.

இந்த விடயத்துக்காக நாம் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் மன்னிப்புக் கோரினோம். உரிய அதிகாரிகளை நேரில் சந்தித்து மிகத் தெளிவாக விளக்கியிருந்தோம். சாதக பாதக நிலையை தெளிவுபடுத்தி எமது புலவை திறந்துவிடும்படி பணிவாக வேண்டினோம்.

எனினும், ஏழை விவசாயிகளான நாங்கள் வஞ்சிக்கப்பட்டோம். இதன் அடிப்படையிலேயே எமது உரிமைகளை பெற்றுக்கொள்ள போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு மாவட்டச் செயலகத்துக்கு முன் ஒன்றுகூடி போராட்டத்தை முன்னெடுத்தோம்.

2024 ஆம் ஆண்டுக்கான சிறுபோக செய்கைக்காக நெடுங்கண்டல் புலவை திறந்துவிடுமாறு விவசாயிகள் சார்பாக கோரிக்கை முன்வைக்கிறோம்- என்றனர்.

மேலும், இப்போராட்டத்தின்போது விவசாயிகளின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

(எ)

# அபிவிருத்தித் திட்டங்களுக்கு அனைவரும் ஒத்துழையுங்கள்!

## கோருகின்றார் பிரதமர் தினேஷ்



கொழும்பு, மே. 15

நாட்டின் அபிவிருத்தி திட்டங்களுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றில் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டின் அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரிடமும் நாம் கோரிக்கை விடுத்து வருகின்றோம்.

ஆளுந்தரப்பு எதிர்த்தரப்பு பாகுபாடின்றியே நாம் இந்த விடயத்தில் செயற்படுகின்றோம். இரண்டு வருடங்களாக முடங்கியிருந்த அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிக்க வரவு செலவுத்திட்டம் வழிவகை செய்துள்ளது. அதிகாரப்பரவலாக்கப்பட்ட நிதியுதவி திட்டங்கள் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் வழங்கப்பட்டுள்ளது -என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

அத்துடன், பாராளுமன்றத்தில் உள்ள சுயேச்சைக் குழு, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினர் புதிய கூட்டணியில் இணைவார்கள் என்றும் அவர் கூறினார். (ஐ)

## பள்ளிமுனை...

வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

மன்னார் பள்ளிமுனை மேற்கு பகுதியைச் சேர்ந்த 62 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளதுடன், மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## நீதிமன்ற...

விடப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட மோசமான இனப்படுகொலை நினைவாக ஆண்டுதோறும் மே 18 ஆம் திகதி உறவுகளை நினைவேந்தி நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையில், இம்முறை இலங்கை பொலிஸார் நீதிமன்றங்களை நாடி குறித்த நினைவேந்தலுக்கு தடை உத்தரவுகளைப் பெற்றுள்ளனர். வடக்கு, கிழக்கில் நீதிமன்றங்கள் இனவாத பொலிஸாரின் கட்டளைகளுக்குப் பணிந்து செயல்படுகின்றனவா?

"கடந்த ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றம் வழங்கிய உத்தரவில் பொதுமக்களை ஒன்று கூட்டுவதும் - அவர்களுக்கு கஞ்சி பரிமாறுவதும் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும் எனக்கூறி பொலிஸார் கோரிய தடை உத்தரவுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அப்படியெனில், எதிர்வரும் வெசாக் தன்சல் செயல்பாடுகளையும் சுகாதார சீர்கேட்டை காரணம் காட்டி தடுத்து நிறுத்துமாறு பொலிஸார் நீதிமன்றங்களை கோருவார்களா? அதனை ஏற்று நீதிமன்றங்கள் தடையுத்தரவு வழங்குமா? அவ்வாறான உணவு வழங்கலை தடுத்து நிறுத்த உங்களால் முடியுமா? தமிழர்களுக்கு ஒரு நீதி சிங்களவர்களுக்கு ஒரு நீதியா? இந்த இனவாத செயல்பாடுகளை உடனடியாக நிறுத்துங்கள் - இவ்வாறு நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோது கஜேந்திரன் எம். பி. கூறினார். (ஐ)

## நினைவேந்தும்...

தெரிவித்துள்ளார்.

திருகோணமலை - மூதூர் சேனையூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய நான்கு பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதேபோன்று, கல்முனையிலும் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலுக்கு தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இவை தொடர்பில் சம்பந்தன் எம். பி. தெரிவித்த கருத்துகள் வருமாறு,

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மே மாதம் உணர்வுபூர்வமானது. அவர்கள் போரில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூருவதற்கு முழுமையான உரித்துடையவர்கள். அவர்களின் அந்த அடிப்படை உரித்தை யாரும் நிராகரிக்கவே முடியாது - அவ்வாறு நிராகரிப்பதற்கு இடமளிக்க முடியாது.

அவ்வாறு இடையூறுகளை ஏற்படுத்துவதும் - நிராகரிப்பதும் அடிப்படை சட்டங்களை மீறுவதாகும். திருகோணமலை மூதூரில் தமது உறவுகளை நினைவுகூர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கல்முனையில் நினைவு கூரல் தடுக்கப்பட்டுள்ளது. இது அடிப்படை மனித உரிமை மீறலாகும். இவ்விதமான செயல்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அத்துடன், கைது செய்யப்பட்டவர்கள் தாமதமின்றி விடுவிக்கப்படுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பகிரங்கமாகக் கோரிக்கை விடுகின்றேன். எமது மக்களின் உரிமைகளை கடந்த ஏழு தசாப்த காலமாகப் பறித்து வருகின்ற நிலையில்தான் சமஷ்டி அடிப்படை யிலான அதிகாரங்களை பகிருமாறு கோரி வருகின்றோம் - என்றார். (ஐ)

## பலஸ்தீனம்...

- என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அவர், பலஸ்தீன விடயத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பிலும் - சர்வதேச தலையீடு அவசியம் என்றும் கூறும் இலங்கை எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கூறும்போது உள்ளக விவகாரம் என்று கூறுவது ஏன்? - என்றும் கேள்வி எழுப்பினார்.

பலஸ்தீனத்தின் இன்றைய நிலைமை மிகவும் பாரதூரமானது - கவலைக்குரியது. இந்த நிலைமையை எவரும் அலட்சியப்படுத்தக்கூடாது. இந்நிலையில் இந்த பாராளுமன்றத்தில் இரு தலைப்பட்சமாக நடந்துகொள்பவர்களும் இருக்கின்றார்கள். அவர்களின் செயல்பாடு நயவஞ்சகமானது.

இஸ்ரேல் தாக்குதலை நாங்கள் கடுமையாக கண்டிகின்றோம். ஆனால், அதே மனசாட்சியுடன் இங்கு 15 வருடங்களுக்கு முன்னர் நடந்தவை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## விடுதலைப்...

நாடு) என்ற கருத்தை கைவிடவில்லை. தமிழீழத்துக்கான பிரசாரம் மற்றும் நிதிசேர்ப்பு என தமிழீழத்துக்கான நடவடிக்கைகள் தொடர்ந்து இரகசியமாக நடைபெறுகின்றன.

போரில் உயிர் தப்பிய விடுதலைப் புலிகள் அமைப்பின் நிர்வாகிகள் இலங்கையிலும் சரி - சர்வதேச அளவிலும் சரி விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் கட்டமைக்க தேவையான முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான குழுக்கள் மக்கள் மத்தியில் பிரிவினைவாத போக்கைத் தொடர்ந்து வளர்த்து வருவதோடு, இந்தியாவிலும் குறிப்பாக தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கான ஆதரவுத் தளத்தை மேம்படுத்துகின்றனர். இது இந்தியாவின் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்" - என்று சுட்டிக்காட்டியுள்ளது. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலையை தொடர்ந்து கடந்த 1991ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டது. அதன் பிறகு குறிப்பிட்ட கால இடைவெளியில் இந்த தடை உத்தரவு நீட்டிக்கப்பட்டு வருகிறது. (ஐ)

## 1220...

தெரிவித்தார்.

டிசெம்பரில் நடக்க வேண்டியிருந்த சாதாரண தரப் பரீட்சை நிறைவுக்கு வருகிறது. இதன் பின்னர் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு உயர்தர வகுப்புகளும் ஆரம்பமாகும். இந்த மாணவர்களுக்கு ஜூன் முதல் வாரத்தில் உயர்தர வகுப்புகளில் இணைய வாய்ப்பு கிடைக்கும். அதற்கு தேவையான அமைச்சரவை அனுமதி ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றுநிருபம் 15ஆம் திகதி வெளியிடப்படும். பரீட்சைகள் நிறைவடைந்த பின்னர் மே 20ஆம் திகதி பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

மேலும், கல்வி நிர்வாக மறுசீரமைப்பு செயல்பாடுகளில் ஆரம்ப கட்டத்தை எட்டியுள்ளோம். இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அதன் சுற்றுநிருபம் எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படும். இதற்கமைய நாடளாவிய ரீதியில் 1,220 கொத்தணி பாடசாலைகள் உருவாக்கப்படவுள்ளன. இவற்றை மேற்பார்வையிடுவதற்காக 350 பாடசாலை சபைகள் உருவாக்கப்படும்.

தற்போதுள்ள 100 கல்வி வலயங்களும் படிப்படியாக அதிகரிக்கப்படும். பாடசாலைகள் குழுக்களின் அடிப்படையில், 01 - 11ஆம் தரம் வரையிலான வகுப்புகளைக்கொண்ட பாடசாலைகளுக்கு மாணவர்களை உயர்தரத்துக்கு உள்வாங்கும் அதிகாரம் அதிகாரிகளுக்கு உள்ளது.

மேலும், இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல், கணிதம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் வெளிநாட்டு மொழிப் பாடங்களுக்கான பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முக பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வில் பங்கேற்ற 7 ஆயிரம் பேரில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு பாடப் பொருத்தத்தின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பயிற்சி முடிந்த பின்னர் ஜூன் முதலாம் திகதிக்குள் பாடசாலைகளில் இணைக்கப்படுவர். விஞ்ஞான தொழில்நுட்ப பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவுக்கு தீர்க்கப்படும். உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் இடை நிறுத்தப்பட்ட மாகாண ஆசிரியர் நியமனங்கள் தொடர்பான பிரச்னைகளும் தற்போது தீர்க்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், அதிபர்களுக்கான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதிபர்களின் தொழிற்சங்கங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் அதிபர்களுக்கான கொடுப்பனவுகள், தரம் உயர்த்துதல் மற்றும் ஏனைய சில நடைமுறை விடயங்கள் உள்ளடங்கியுள்ளன - என்றும் கூறினார். (ஐ- எ)

## ஐஸ்...

உறுதி செய்தனர்.

இணுவில் துரை வீதிக்கு அண்மையாக ஆவா அடாவடி குழுவை சேர்ந்தவர் என்று கூறப்படும் நபரின் வீட்டிலேயே இந்தப் போதைப் பொருள் உற்பத்தியகம் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் உற்பத்தியகம் ஒன்று கண்டறியப்படுவது நாட்டில் இது இரண்டாவது சந்தர்ப்பமாகும். இதற்கு முன்னர் கம்பஹா - ஹோமாகமை பிரதேசத்தில் இவ்வாறு போதைப் பொருள் உற்பத்தியகம் கண்டறியப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இந்த இடத்தில் போதைப்பொருளை திரவ வடிவில் கடத்தி வந்து வடிகட்டி ஐஸ் போதைப் பொருளாக மாற்றப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது. ஐஸ் போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையிலேயே இந்த உற்பத்தியகம் தொடர்பில் தெரியவந்தது.

போதைப்பொருள் உற்பத்தியகத்தை பொலிஸார் முற்றுகையிட்டபோது அங்கு எவரும் இருக்கவில்லை என்றும் சம்பவ இடத்தை யாழ். போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி செ. பிரணவன், யாழ் பல்கலைக்கழக துறைசார் நிபுணர் ஒருவரும் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு உறுதிப் படுத்தினர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குற்றத்துடன் தொடர்புடையவர்களை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## சுமந்திரன்...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து கட்சிகளும் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இந்த வேளையில் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறவுள்ளதாக பேச்சு எழுந்துள்ளது. இந்த நிலையில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடுமாறு நான் கோரினேன் என்று அவர் கூறியிருப்பது அப்பட்டமான பொய் - என்றார்.

முன்னதாக, வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுமுன்தினம் சுமந்திரன் எம். பி. செய்தியாளர் சந்திப்பை நடத்தியிருந்தார்.

அப்போது, அவரிடம், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக சுமந்திரனை நிறுத்தலாம் என்று சிவில் சமூக அமைப்புகள் மத்தியில் பேச்சு உள்ளது உண்மையா? உங்களிடம் இது பற்றி கேட்கப்பட்டதா? - என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இந்தக் கேள்விக்கு பதிலளித்த சுமந்திரன், "ஆம். உத்தியோகபூர்வமாக அனைவரும் இணைந்து வந்து கோரிக்கையை முன்வைக்கவில்லை. ஆனால், இந்தப் பேச்சு எழுந்தவேளையிலேயே சுரேஷ் பிறேமச்சந்திரன் என்னிடம் ஒரு தடவை கேட்டிருந்தார். தமிழ்ப் பொது வேட்பாளருக்கு பொருத்தமானவர் நீங்கள்தான் என்றும் ஒரு சிலரால் இது குறித்து பகிரப்பட்டது எனவும் அது குறித்து எனது நிலைப்பாடு என்ன என்றும் என்னிடம் சுரேஷ் பிறேமச் சந்திரன் கேட்டிருந்தார். நான் அப்போதே எனது நிலைப்பாட்டை சொல்லியிருந்தேன்", - என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ - எ)

## பிரபாகரனை...

இன்றைய நிலை குறித்து நாங்கள் கவலையடைகிறோம். பலஸ்தீனர்கள் இன்று எதிர்கொண்டுள்ள நிலைமைக்கும் - இலங்கையின் நிலைமைக்கும் இடையில் பரஸ்பர ஒற்றுமை காணப்படுகிறது.

இரண்டாம் உலக மகா யுத்தம் தீவிரமடைந்தபோது யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருதற்கு பெரிய பிரித்தானியா யூதர்களுடன் ஒப்பந்தம் செய்தது. யுத்தம் முடிந்தவுடன் தமக்கு ஒரு நாடு அல்லது இராச்சியம் வேண்டும் என யூதர்கள் பெரிய பிரித்தானியாவிடம் வலியுறுத்தினார்கள். இரண்டாம் உலக மகா யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் பெரிய பிரித்தானியா பலஸ்தீனர்களுக்கு சொந்தமான பூர்வீக பூமியில் யூதர்களை குடியமர்த்தி பிரச்னைகளை தோற்றுவித்தது.

தமிழர்கள் உலகெங்கிலும் வாழ்கிறார்கள். அவர்கள் தென்னிந்திய திராவிட மொழியை அடிப்படையாகக் கொண்டவர்கள் ஆகவே, அவர்களுக்கு இலங்கைக்குள் ஒரு தனித்த நாட்டை உருவாக்கிக் கொடுப்பதாக பெரிய பிரித்தானியா போலியான சுதந்திரத்தை வழங்கி இலங்கையில் வாழ்ந்த தமிழ் தலைவர்களிடம் தெரிவித்தது. இதன் பின்னரே ஐம்பதுக்கு - 50 அதிகாரம் பற்றி பேசப்பட்டது. ஐம்பதுக்கு 50 அதிகாரம் என்பது தோல்வியடைந்த பின்னரே யுத்தம் தோற்றம் பெற்றது.

இராணுவம் விடுதலைப் புலிகளை அழித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவராமல் இருந்திருந்தால் தெற்காசியாவில் தமிழீழம் தோற்றம் பெற்றிருக்கும். அவ்வாறான நிலை தோற்றம் பெற்றால் தெற்காசியாவில் காஸாவை போன்ற நிலைமை எமக்கு ஏற்பட்டிருக்கும். தமிழீழம் இஸ்ரேல் போல் செயல்பட்டிருக்கும். பலஸ்தீனர்களின் இன்றைய நிலையை நாங்கள் எதிர்கொண்டிருப்போம்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை பாதுகாப்பதற்கு அமெரிக்காவின் கடற்படையின் கப்பல் இலங்கை கடற் பரப்புக்கு அப்பால் - சர்வதேச கடல் எல்லைக்கு வந்திருந்தது. பிரபாகரனை உயிருடன் ஒப்படைக்குமாறு அமெரிக்கா அப்போதைய அரசாங்கத்திடம் வலியுறுத்தியது. ஆனால், அதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இடமளிக்கவில்லை. இதேபோல் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளும் பிரபாகரனை உயிருடன் கோரின. பிரிவினைவாத யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கம் மேற்குலக நாடுகளிடம் இருக்கவில்லை. தமிழீழத் துக்காகவே உலக நாடுகளும் குரல் கொடுத்தன.

இலங்கையில் தமிழீழத்தை உருவாக்க பெரிய பிரித்தானிய முன்னெடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. ஆனால், பலஸ்தீனத்தில் அவர்களின் திட்டம் வெற்றிபெற்றது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# உலக உணவுத் திட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் யாழில்



யாழ்ப்பாணம், மே. 15

உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் ஜெரால்ட் ரெபெல்லி மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளார்.

இந்த விஜயத்தின்போது யாழ் மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபனை மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச் சந்திப்பில் செயற்றிட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் மற்றும் செயற்றிட்டங்கள் குறித்து எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்த குழுவில் உலக உணவு திட்ட அரசாங்க பங்குடமை அதிகாரி முஸ்தபா நிஹ்மத், உலக உணவுத்திட்ட பொறியியலாளர் டபிள்யூ.ஏ.சந்திரதிலக, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் வ.தர்சினி ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# சுவசெரிய அம்புலன்ஸ் சேவை செயலிழக்கும் ஆபத்து நிலை!

## எதிர்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 15

சுவசெரிய அம்புலன்ஸ் சேவையிலுள்ள 322 அம்புலன்ஸ் வண்டிகளில் 56 வண்டிகள் செயழிழந்துள்ளதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரை நிகழ்த்திய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த அம்புலன்ஸ் சேவையில் பணிபுரிந்த சாரதிகளும், அவசர சேவை உத்தியோகத்தர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் அவர் கூறினார்.

அம்புலன்ஸைப் புதுப்பித்தல், ஊழியர்களைச் சேவையில் ஈடுபடுத்தல் போன்றவற்றில் அரசாங்கத்தின் கவனம் குறைந்துள்ளமையினால், இது தொடர்பில் அவதானம் செலுத்தி, இதனை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்ல இடமளிக்க வேண்டாம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார். (அ)

# பாடசாலைக் கட்டமைப்பில் விசேட கவனம் வேண்டும்!

## ஹேசா விதானகே வலியுறுத்து

கொழும்பு, மே. 15

பாலர் பாடசாலைக் கட்டமைப்பு தொடர்பாக கல்வி அமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாலர் பாடசாலை கட்டமைப்பு தொடர்பாக கல்வி அமைச்சு கவனம் செலுத்த வேண்டும். இந்த நாட்டில் பாலர் பாடசாலைகளை சுயதொழில்போன்று நடத்தப்படுகின்றது.

இந்த நாட்டில் பாலர் பாடசாலை கட்டமைப்பு தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்ததப்பட வேண்டும்.

உயர்தர பரீட்சைக்கு தோற்றாத அல்லது உயர்தர பரீட்சையில் சித்தியடையாத பெண்பிள்ளைகள் பெரும்பாலும் பாலர் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனர். பாலர் பாடசாலையில் இருந்தே ஒரு பிள்ளையின் கல்வி ஆரம்பமாகின்றது.

எனவே கல்வி அமைச்சு இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்-என்றார். (அ)

# பலஸ்தீன விவகாரம் தொடர்பில் இலங்கையின் அழுத்தம் தேவை!

## கூறுகிறார் மகிந்த ராஜபக்ஷ



கொழும்பு, மே. 15

**பலஸ்தீன விவகாரம் தொடர்பாக உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் நாடு என்ற ரீதியில் இலங்கையும் அழுத்தம் கொடுக்கவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்கு குரல் கொடுத்துவருகின்றோம். பலஸ்தீன மக்கள் இன்று சொல்லொண்ணா துயரங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்தியமைக்கு நான் இந்த உயரிய சபைக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

பலஸ்தீன - இலங்கை ஒத்துழைப்பு அமைப்பின் ஊடாக எம்மால் அந்த மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்க முடிந்தது.

பலஸ்தீனத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு உலக நாடுகள் ஒத்துழைப்பு வழங்கி செயற்பட வேண்டும்.


இஸ்ரேலிய தாக்குதலினால் மில்லியன் கணக்கான மக்கள் வெளியேறியுள்ளனர். கடந்தவாரத்தில் மாத்திரம் 50 லட்சம் பலஸ்தீன மக்கள் வெளியேறியுள்ளனர்.

பலஸ்தீன விவகாரம் தொடர்பாக உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் நாடு என்ற ரீதியில் இலங்கையும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அதேபோன்று பலஸ்தீன மக்களுக்கான நிவாரணங்களை தொடந்தும் வழங்க வேண்டும் - என்றார். (அ)

# முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவாக யாழ். பல்கலைக்கழகத்தில் குருதிக்கொடை







யாழ்ப்பாணம், மே. 15

கடந்த 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவேந்தி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை முதல் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில், யாழ்.பல்கலைக்கழக மாணவர் கட்டடத் தொகுதியில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், விரிவுரையாளர்கள் என பலரும் குருதிக்கொடை வழங் கிய நிலையில், பொதுமக்களும் இதில் பங்கேற்றனர்.

அதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழக மாணவர்களும் குருதிக் கொடையில் உணர்வுடன் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசு வழங்கிய அரிசியால் ஏழு கோழிகள் உயிரிழப்பு!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 15

அரசாங்கத்தினால் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட அரிசியை உட்கொண்டு பாணகமுவ பகுதியில் ஏழு கோழிகள் உயிரிழந்துள்ளன. அரசியின் தரம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை அரசாங்கம் அறிந்துள்ளதா என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் அரசி வழங்கப்படுகின்றது. வினியோகிக்கப்படும் அரிசியின் தரம் தொடர்பில் கடந்த காலங்களில் பல கேள்விகள் எழுந்துள்ளன.

வழங்கப்படும் இலவச அரிசி தொடர்பில் இன்று (நேற்று) ஊடங்களில் செய்தி வெளியாகியுள்ளன. அதாவது பாணகமுவ பிரதேசத்தில் உள்ள ஒருவர் அரசாங்கத்தினால் கிடைக்கப் பெற்ற அரிசியை தான் வளர்க்கும் கோழிகளுக்கு தானியமாக வழங்கியுள்ளார்.இதனை உட்கொண்ட 07 கோழிகள் உயிரிழந்துள்ளன. இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் அறிந்துள்ளதா?-என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த சபை முதல்வரும்,கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, இந்த கேள்விக்கு உடனடியாக பதிலளிக்க முடியாது.விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்கிறேன்.

அரசாங்கத்தினால் விநியோகிக்கப்படும் அரிசியின் தரம் தொடர்பில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்விலும் கேள்விகள் எழுப்பட்டன-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.